KARUVI - CENTRE FOR SOCIAL RESOURSE OF DIFFERENTLY ABLED

LET'S WIN THE WORLD WITH DIFFERENT ABILITIES

# வலு

ஜனவரி - மார்ச் 2017 காலாண்டிதழ் இதழ் - 13

ரூபா 100




## மனதை வென்ற மங்கை

நோலியா கரெல்லா

(Noelia Garella)

மாற்று ஆற்றல் உடையோருக்கான கல்வி

வெளியீடு

கருவி

மாற்றுத் திறனாளிகளின் சமூகவள நிலையம்

# காணி வாங்கப் பங்களியுங்கள்.
# கருவியின் கரத்தைப் பலப்படுத்துங்கள்.

*** கருவி**

மாற்றுத் திறனாளிகளுக்கு எல்லா வகையிலும் உதவுகின்ற ஒரு சமூ கப்பணி நிறுவனம்.

***அங்கத்தவர்கள்**

கண்பார்வையற்றோர், கை, கால் பாதிக்கப்பட்டோர் பேச்சுத்திறன் குன்றியோர், மன விருத்தி குன்றியோர் (யுத்தம், விபத்து, இயற்கை அனர்த்தங்களால் அங்கவீனமானோர்)

*** பயனாளிகள்**

354 அங்கத்தவர்கள். 1000க்கும் அதிகமான அவர்களின் குடும்பத்தவர்கள் (கணவன், மனைவி, பிள்ளைகள், பெற்றோர்)

*** காணிவாங்குவதன் அவசியம்**

. நிரந்தரமான இடம் ஒன்றில் பணிகளை ஒழுங்கமைத்தல்.
. வலு இழந்தவர்கள் வந்து செல்ல வசதியான இடம்.
. ஒரே இடத்தில் அதிக தொழில் வாய்ப்பு வசதிகளை வழங்குதல். (விவசாயப்பண்ணை, தொழிற் பயிற்சிப் பகுதி, உற்பத்தி தொழிற் சாலைகள்)

**காணி 30 பரப்பு சுற்று மதிலுடன் கூடியது.**

நன்கொடைகளை நேரடியாகவோ அல்லது வங்கிக் கணக்கினூடாகவோ வழங்கலாம்.

KARUVI
Hatton National Bank Ltd.
Jaffna Metro Branch, A/C. 0160 20 64 1972
(Swift Code No. HBLILKLX001)

சதுர அடிகளாகவும் வாங்கி வழங்கலாம்.
10 சதுர அடி
ரூபா 1440/=

# கருவி

மாற்றுத்திறனாளிகளின் சமூகவள நிலையம்

Tel: 021 205 4224, 0768582732
இல 1166/15 அருளம்பலம் ஒழுங்கை,
நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.
karuvi.org@gmail.com

இதழ் 13

# வலு

ISSN : 2513 - 2989 ISBN : 978 - 955 - 23 - 0019 - 3 ஜனவரி - மார்ச் 2017

## மாற்றுத் திறனாளிகள் தொடர்பான தகவல்களை தாங்கி வெளிவரும் காலாண்டு சஞ்சிகை

பிரதம ஆசிரியர்

**திரு.க.தர்மசேகரம்**

நிர்வாக ஆசிரியர்

**நா.கீதாகிருஷ்ணன்**

**karuvivalu@gmail.com**

**T.P 076 6385563**

ஆசிரியர் குழு

**திரு.செ.பிரிந்தாபரன்**

**திரு.செ.சசிராஜ்**

**திரு.ச.க.தேவதாசன்**

இதழ்க்குழு ஆலோசகர்

**திரு.க.சர்வானந்தா**

வெளியீடு

**கருவி**

**மாற்றுத்திறனாளிகளின்**

**சமூகவள நிலையம்**

இல.1166/15, அருளம்பலம் ஒழுங்கை

நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.

பொருளடக்கம்

1. சூழல் நேயராவோம் ---------------02
2. மாற்று ஆற்றல் உடையோருக்கான கல்வி---------------------- 03
3. விழிப்புலனற்ற ஒருவருக்கு நல்லதொரு நண்பனாக இருப்பதற்கு உங்களுக்கு சிலகுறிப்புக்கள்------------------- 08
4. செய்திச் சாளரம் -------------------- 11
5. விதி வழியே-------------------------15
6. எண்ணக் கிண்ணம்---------------18
7. வலிகளை உரமாக்கி எழுந்த உலக விருட்சங்கள் ---------------19
8. தசரசம் ---------------------------------22
9. முற்றத்து மல்லிகை -------------30
10. வலுவிடம் கேளுங்கள் --------- 33
11. வலு தரும் ஜோதிடம் -------------34
12. எழுதுங்கள் வெல்லுங்கள் ---- 35

# சூழல் நேயராவோம்

கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூகவள நிலையம்

இல.1166/15, அருளம்பலம் ஒழுங்கை நல்லூர் வடக்கு,யாழ்ப்பாணம்.

Phone - 021 205 4224 Email - karuvi.org@gmail.com Web - www.karuvi.org

இயற்கை மனித குலத்துக்கு நிறைந்த அனுகூலங்களைத் தந்திருக்கிறது . ஆனாலும் மனிதன் இயற்கைக்கு மாறான செயல்களைப் புரிந்து இயற்கையின் சீற்றத்தை அதிகரித்துள்ளான் அதன் விளைவை நாம் தற்போது அனுபவித்துக்கொண்டு இருக்கின்றோம். மனித இருத்தலுக்கே சவாலாக அமைகின்ற அளவுக்கு இயற்கை மாற்றங்கள் நடந்து வருகின்றன பருவ கால மாற்றம் புவி வெப்பமடைதல் என மாறுதல்களை அடுக்கிக்கொண்டே போகலாம்

தற்போது பொலுத்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பொருட்களின் பாவனையால் பூமி பல்வேறுபட்ட நெருக்கடிகளை எதிர் கொள்கின்றது. தாவரங்களின் வளர்ச்சி பாதிப்படைதல் நிலத்தடி நீர் குறைவடைதல் போன்ற பாதிபுக்களை நாம் குறிப்பிட்டுச் சொல்ல முடியும்.


நாம் வலுவிழப்புடன் கூடிய நபர்கள் சேவை வழங்குனர்களாக தம்மை முன்னிறுத்த வேண்டும் என்பதை எப்பொழுதும் வலியுறுத்தி வருகின்றோம் இயற்கைச் சமனிலை பேணு வதற்கு மனித குலத்தால் எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகளில் மாற்றுத் திறனாளிகளும் ஈடுபட வேண்டும் குறிப்பாகப் பொலுத்தின் மற்றும் பிளாஸ்ரிக் பொருட்களின் பாவனையை முழுமையாக கட்டுப்படுத்தல் என்ற செயற்பாட்டில் மாற்றுத்திறனாளிகளும் ஈடுபடுவதோடு பொது மக்களையும் இவ்வாறான செயற்றிட்டங்களில் ஈடுபடும் வகையில் விழிப்புணர்வூட்டும் நடை முறைகளில் வலுவிழப்புடன் கூடிய நபர்கள் ஈடுபடுதல் வேண்டும் இவ்வாறு ஈடுபடுகின்ற பொழுது இயற்கைச் சூழலில் நேசம் மிக்கவர்களாக மாற்றுத்திறனாளிகளும் இருக்கின்றனர் என்ற செய்தியினை சமூகத்திற்கு நாம் வழங்க முடியும்

நன்றி

பிரதம ஆசிரியர்
திரு.க.தர்மசேகரம்

**அன்பார்ந்த வாசக நெஞ்சங்களே!**

வலு என்ற இச் சஞ்சிகை உங்களுக்கானதே. எனவே உங்களுக்குள் புதைந்து கிடக்கும் திறமைகளை இச் சஞ்சிகை மூலமாக வெளிக் கொணருங்கள். மேலும் மாற்றுத் திறனாளிகளுக்கு ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பான கேள்விகள் மற்றும் உங்களுக்கு இருக்கும் சந்தேகங் களை வலுவிடம் கேளுங்கள் பகுதிக்கு எழுதி அனுப்புங்கள்.



# மாற்று ஆற்றல் உடையோருக்கான கல்வி

த.சிவகுமார்
உதவிக் கல்விப்பணிப்பாளர்
யாழ்ப்பாணம்

மாற்று ஆற்றல் உடையோருக்கான கல்வி வாய்ப்புக்கள், அவர்களுக்கான உதவிகளை பெற்றுக் கொள்ளும் முறைகள், அவர்கள் பயன்படுத்தும் கருவிகள் பற்றிய அறிவு என்பன அனைவருக்கும் அவசியமானதாகும். நாம் அனைவரும் விசேடகல்வி பின் வரலாற்றுப் போக்கு பற்றி நோக்கும் போது அதனை பின்வருமாறு வகைப்படுத்த முடியும்.

1. நிறுவனமயப்படுத்தல்
2. உதவி பெறும் விசேடபாடசாலைகள்
3. ஒன்றிணைத்தல்
4. விசேட கல்வி அலகுகள்
5. உட்படுத்தல் கல்வி

நிறுவனமயப்படுத்தல் எனும் போது ஐரோப்பியருடைய ஆரம்ப காலப்பகுதியில் 1505 – 1948 விசேட தேவையுடையோரின் ஆற்றல்களை இனங்கண்டு அவர்களை நிறுவனமயப்படுத்தி அவர்களுக்கான வசதி வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்பட்ட காலப்பகுதியாகும்.

உதவி பெறும் விசேடகல்வி பாடசாலைகள் என்பது நிறுவனமயப்படுத்தப்பட்ட போது மாற்று ஆற்றல் உடையோரின் ஆற்றல்களை இனங்கண்டு அவர்களுக்கு கல்வி போதிக்க முடியும் எனக் கண்டறிந்து. அதன் விளைவாக விசேட கல்வி பாடசாலைகளை உருவாக்கினர். 1912ஆம் ஆண்டு கண்பார்வை இழந்தவர்களுக்காக முதன் முதலில் இரத்மலானையில் விசேட பாட சாலை நிறுவப்பட்டது. அதனைத் தொடர்ந்து 1935ஆம் ஆண்டு கேட்டல் குறைபாடுடைய மாண வர்களுக்கு ‘மஹாவெவ” பாடசாலையும் 1956ஆம் ஆண்டு கேட்டல், குறைபாடு உடையோருக்காக ‘கைதடி நவீல்ட்’ பாடசாலையும் அதனைத் தொடர்ந்து இன்று வரை 130க்கு மேற்பட்ட பதிவு செய் யப்பட்ட பாடசாலைகள் இலங்கையில் இயங்கி வருகின்றது.

ஒன்றிணைத்தல் பருவம் என்பது விசேட தேவையுடைய பாடசாலைகளில் கற்ற மாணவர்களின் கல்வி ஆற்றல்களை இனங்கண்டு அவர்களில் ஒரு பகுதியினரை சாதாரண பாடசாலைகளில் ஒன்றிணைப்பு செய்யப்பட்டனர். முதலில் பார்வைக் குறைபாடுடையோர் 1972ஆம் ஆண்டு சாதாரண பாடசாலைகளில் ஒன்றிணைப்பு செய்யப்பட்டனர்.

விசேடகல்வி அலகுகள் இலங்கையில் உள்ள எல்லாப் பாடசாலைகளிலும் ஆரம்பிக்கப்பட வேண்டும். என்ற கருத்து காணப்பட்ட போதும் இன்றுவரை அதனை நடைமுறைப்படுத்த முடியாத நிலையே காணப்படுகிறது. நவீன கல்வியியலாளர்களின் சிந்தனைப் போக்கிலே ஒரு நாட்டினுடைய கல்வி அபிவிருத்தி, பொருளாதார வளர்ச்சி ஏற்பட வேண்டுமானால் விசேட தேவையுடையோர் சரியான முறையில் கவனிக்கப்பட்டு அவர்களுக்கான கல்விப் போதனைகளும் வழிகாட்டல்களும் சிறந்த முறையில் அமைதல் வேண்டும். விசேட கல்வி அலகுகள் உருவாக்கப்பட்டதன் நோக்கம் ஒரு பாடசாலையில் கற்றலில் இடர்படுகின்ற மாணவர்களின் தேவைகளை அறிந்து அவற்றை நிவர்த்தி செய் வதற்கான வழிகாட்டல்கள் வழங்கப்பட்டு அவர்களை மீண்டும் சாதாரண வகுப்பறையில் இணைத்தலாகும். விசேடகல்வி ஆசிரியர் ஒரு வளவாளராக செயற்படுதலாகும்.

உலக அளவில் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற கல்வி சிந்தனை உடப் டுத்தல் கல்வியாகும். உட்படுத்தல் கல்விக்கான கல்வி ஏற்பாடுகளாவன

1) 1961ம் ஆண்டு தேசியகல்வி ஆணைக்குழுவினால் 6-14 வயதுக்குட்பட்ட சகலரும் பாடசாலைக்கு உள்ளீர்ப்பு செய்யப்பட வேண்டும்

2) 1990ஆம் ஆண்டு சிறுவர் உரிமைகள் சாசனத்தின்படி சகலருக்கும் கல்வி எனும் சித்தாந்தம் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

3) உறுப்புரை (1) – பதினெட்டு வயதுக்குட்பட்ட ஒவ்வொருவரும் பிள்ளை ஆவர். சமவாயத்தில் குறிப்பிட்ட சகல உரிமைகளையும் மாற்று ஆற்றல் உடையோரும் அனுபவிக்க உரிமை உண்டு. உறுப்புரை (23) உடல் உள ஊனமுடைய பிள்ளை அதன் கௌரவத்தை உறுதிப்படுத்தும் தனக்குரியதான நலத்தை ஊக்குவிப்பது. சமுதாயத்தில் தீவிரமாய் பங்கு கொள்ள கூடியதுமான நிலைமைகளில் முழுமையான கண்ணியமான வாழ்க்கையை வாழ உரித்துடையவராவார்.


1994- ஸ்பெயின் நாட்டின் சலமன்கா நகரில் 92 நாடுகள் பங்கு கொண்டு உட்படுத்தல் கல்வியை ஏற்றுக் கொண்டு நடைமுறைப்படுத்தி வருதல்.

1997ஆம் ஆண்டு கட்டாயக்கல்வி கட்டளைகளுக்கமைவாக 5 – 14 வயதுக்குட்பட்ட சகல பிள்ளைகளுக்கும் கல்வி கட்டாயமாக்கப்பட்டது தற்போது கட்டாயக்கல்வி வயதெல்லை 16ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.


**உட்படுத்தல் கல்வி**

சகல வகையிலும் குறைபாடுகளைக் கொண்ட பிள்ளைகளை அவர்கள் வாழ்கின்ற சூழலிலே அருகில் உள்ள பாடசாலையில் அதே வயது ஒத்த மாணவர்களுடன் ஒன்றாக


இணைந்து கல்வி வழங்கும் வாய்ப்பை பெறுதல் உட்படுத்தல் கல்வி ஆகும். அதாவது சகல பிள்ளைகளையும் வேறுபாடின்றி ஏற்றுக் கொள்ளும் .இடமே உட்படுத்தல் பாடசாலையாகும்.




**Intergration ஒன்றிணைத்தல்**



**ஊட்படுத்தல் கல்வி வகுப்பறை (தற்போது)**



**உட்படுத்தல் கல்வியில் இணைய வேண்டியோர்**

1. கல்வித்துறையை சேர்ந்த பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள்
2. இடர்பாடுகளைக் கொண்ட பிள்ளைகள்
3. சாதாரண மாணவர்கள்
4. பிள்ளைகளின் பெற்றோர்
5. அரச பாடசாலை மற்றும் விசேட பாடசாலை ஆசிரியர்கள் பெற்றோர்கள்
6. கல்வியுடன் தொடர்புடைய சகல சேவைகளையும் சேர்ந்த அதிகாரிகள்
7. பாடசாலை ஏனைய பணியாளர்கள்
8. பொதுமக்கள்

**மாற்று ஆற்றல் கொண்ட பிள்ளைகளுக்கு வழங்க வேண்டிய உதவிகள்**

1. அவர்கள் பயன்படுத்தும் உபகரணங்களைப் பெற்றுக் கொடுத்தல்
2. பாடமொன்றின் போது உதவி புரிதல்

3. சமூகப் பணிகளை ஒழுங்கு செய்யும் போது உதவுதல்
4. வகுப்பறையை விசேடமான வகையில் மாற்றியமைத்தல்
5. மேலதிக பாதுகாப்புச் சாதனங்களை வழங்குதல்
6. கலைத்திட்டத்தை இசைவு படுத்தல்
7. பொதுவான பாடசாலையில் போதனை சார்ந்த உதவிகள்.
8. பொதுவான வகுப்பறையில் வைத்து விசேட கல்வி ஆசிரியர்களால் வழங்கப்படும் உதவிகள்

உட்படுத்தல் கல்வியின் ஊடாக உள்ளீர்ப்புச் செய்யப்படுகின்ற மாற்று ஆற்றலுடையோரை நாம் ஏனைய மாணவர்களுக்கு ஒப்பானவராக கொண்டு செல்ல வேண்டும். அவர்களுக்கான கலைத் திட்டம் மதிப்பீட்டு முறைகள் அடைவு மட்டம் என்பன பற்றி ஆசிரியர்கள் கவலைப்படவேண்டியது இல்லை. ஏனெனில் உட்படுத்தல் கல்வி வகுப்பறையில் கலைத்திட்டம் மதிப்பீட்டு முறை, கற்றல், கற்பித்தல் பாணி என்பன நெகிழ்ச்சித் தன்மை கொண்டதாக அமைய வேண்டும். ஒவ்வொரு மாணவர்களதும் தனியாள் வேறுபாடுகளை இனங்கண்டு அவர்களுக்கு ஏற்ற வகையில் கல்விப் போதனை வழங்க வேண்டும்.

மாற்று ஆற்றல் உடையோரை எந்தப் பாடசாலைகளும் எந்த வகுப்பறைகளும் அவர்களை ஒதுக்கிவிட முடியாது அதற்கான சட்டதிட்டங்கள் உரிமைகள் எல்லாம் அவர்களுக்கு உண்டு. அவர்களின் ஆற்றல்களையும் திறன்களையும் இனங்கண்டு அவர்களை உங்கள் பாடசாலையில் வளமாக மாற்றும் போது உங்கள் பாடசாலைகள் வளர்ச்சி அடையும் அவர்களை சுமையாகக் கருதாமல் அவர்களையும் மற்றைய மாணவர்களோடு சேர்ந்து வாழ வழிகாட்டுங்கள்.

உட்படுத்தல் கல்வியின்போது விசேட தேவையுடைய மாணவர்களுக்கான பாடசாலைகளின் பணி மகத்தானது ஏனெனில் இப் பாடசாலைகள் அவர்களை சாதாரண பாடசாலைகளுக்கு உரியவர்களாக உருவாக்கி வழங்கும் பணிகளை ஆற்ற வேண்டியுள்ளது.

இவ்வாறு உட்படுத்தல் கல்வியின்போது பாடசாலையில் சேர்ந்து கொள்ளும் மாற்று ஆற்றல் உடையோரை இனங் காணல், அவர்களுக்கான கற்றல் கற்பித்தல் முறைகள், கருவிகளை கையாளும் ஆற்றல், வழிகாட்டல்கள், அர்ப்பணிப்புடன் பணியாற்றுதல் அன்பு செலுத்துதல் போன்ற ஆளுமைப் பண்புகளை அனைத்து அதிபர்கள், ஆசிரியர்கள் வளர்த்துக் கொள்வதன் மூலம் எமது தேசத்தை வளமாக்கிக் கொள்ள முடியும்.

## மாற்று ஆற்றல் உடையோரின் வகைப்பாடு

1. மீத்திறனும் விசேட நிபுணத்துவமும்
2. அறிவுசார் குறைபாடு
3. ஒட்டிசத் திருசிய ஒழுங்கீனம்
4. நடத்தை ஒழுங்கீனம்

5. உடல் மற்றும் ஆராக்கியக் குறைபாடு
6. பேச்சு மற்றும் மொழிசார் ஒழுங்கீனம்
7. கற்றல் குறைபாடு
8. மனவெழுச்சி நடத்தைப் பிறழ்வுகள்
9. புலன்சார் குறைபாடுகள்
10. தற்சிந்தனை
11. மெதுவாக உளவளர்ச்சி அடைதல்
12. பல்வித இயலாமைகள்
13. வேறு சுகாதாரக் குறைபாடுகள்
14. மூளையில் ஏற்பட்ட பாதிப்பு
15. உடல் அவயக் குறைபாடு
16. மெல்லக் கற்றல் குறைபாடு
17. தொடர்பாடல் குறைபாடு
18. மனநிலை பாதிக்கப்பட்டோர்
19. சமூகவிரோத நடத்தைகள்
20. ஆக்கத்திறன் உடைய பிள்ளை
21. உளக் குறைபாடு உடைய பிள்ளை
22. பொருத்தமற்ற நடத்தைப் பிரச்சனை உடைய பிள்ளை
23. அங்கக் கோணல் குறைபாடு
24. கவனமிழப்பும் பிறழ்வும்

இவ்வாறான மாற்று ஆற்றல் உடையோர் வீடுகளில் முடங்கிக் கிடக்காது அனைவரும் சாதாரண பாடசாலைகளில் உள்ளீர்ப்புச் செய்யப்பட்டு அவர்களுக்கான வசதி வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்பட்டு அவர்களை கல்வியின் ஊடாக வலுப்படுத்தும் போதே எமது தேசம் வளமடையும். உட்படுத்தல்கல்வி வெற்றி பெறும். நாம் அனைவரும் அதனை நோக்கிச்செயற்படுவோம்.

அன்பார்ந்த வாசகர்களே!

மாற்றுத் திறனாளிகள் தொடர்பாகவோ அல்லது மாற்றுத் திறனாளிகள் தொடர்பான விழிப் புணர்வை சமூகத்திற்கு ஏற்படுத்தக்கூடிய வகையில் அல்லது மாற்றுத் திறனாளிகளுக்கு நம்பிக்கை ஊட்டக்கூடியனவாக ஆக்கங்களை உங்களிடம் எதிர்பார்க்கின்றோம். எனவே உங் கள் ஆக்கங்களை கவிதையாகவோ அல்லது சிறுகதையாகவோ அல்லது கட்டுரையாகவோ அல் லது செய்தித் துணுக்குகளாகவோ எமக்கு எழுதி அனுப்புங்கள் தரமான உங்களது ஆக்கங்கள் தொடர்ந்து வரும் வலுவில் பிரசுரிக்கப்படும் என்பதை தெரிவித்து நிற்கின்றோம்




# விழிப்புலனற்ற ஒருவருக்கு நல்லதொரு நண்பனாக இருப்பதற்கு உங்களுக்கு சில குறிப்புகள்



1. விழிப்புலனற்ற ஒருவர் ஓர் அறையில் அல்லது ஓர் இடத்தில் இருக்கும் போது அவருக்கு அவசியம் இல்லை என கருதி மின் விளக்கை அணைத்து விட வேண்டாம் அல்லது அதனை போட வேண்டிய இடங்களில் போடாமல் விட்டு விட வேண்டாம் ஏனெனின் எந்தவொரு விழிப்புலனற்றவரும் அவருக்கு ஒருசிறிதும் வெளிச்சம் தெரியாவிட்டா லும் கூட இருட்டறையில் இருக்க விரும்புவதில்லை. அப்படியே விழிப் புலனற்ற ஒருவர் இருட்டறையில் இருப்ப தைக் கண்டால் அவருக்கு அதனை அறி வித்து மின்விளக்கை ஒளிரச் செய்யவும்.

2. புதியதொரு அறையில் அல்லது இடத்தில் ஒரு விழிப்புலனற்றவர் தரித்து தங்கியிருக்க நேர்ந்தால் இயலுமானவரை அவ்விடத்தில் உள்ள எல்லாப் பொருட்களையும் அவர் அகக் காட்சி பெறும் வகை யில் அவருக்கு சுட்டிக்காட்டவும் இயலுமான பொ ரு ட் க ளி ன் அ மை விடங்களை அவர் கைகளால் தொட்டு உணர்ந்து கொள்ளச் செய்யவும். உதாரணமாக படுக்கை அறை கட்டில் மேசை, கதிரை போன் றன வைக்கப்பட் டுள்ள இ ட ங்கள்.




3. ஆபத்தை விளைவிக்கக் கூடிய பொருட்கள் உள்ள இடங்களில் விழிப்புலனற்ற ஒருவர் தங்க வைக்கப்படுவதை தவிர்த்துக் கொள்ளுங்கள் அல்லது அத்தகைய ஆபத்து அவ்விடத்தில் உள்ளது என்பதை அவருக்கு அறியப்படுத்துங்கள். உதாரணமாக கூர்மையான பொருட்கள் உள்ள இடங்கள் மின்கசிவு இருக்கக் கூடிய இடங்கள்.

4. விழிப்புலனற்ற ஒருவருக்கு நன்கு பழக்கப்பட்ட ஓர் இடத்தில் அவ்விடத்தைப்பற்றிய பொருட்களைப் பற்றிய

அறிவுறுத்தல்களை மீண்டும் மீண்டும் கூறிக் கொண்டிருக்கத் தேவையில்லை அவர் நன்கு பழக்கப்பட்ட பின் அறிவுறுத்தல் வழங்குவதை நிறுத்தி விடுங்கள். இல்லாவிடில் அது அவ ரது பார்வைக்குறையை மீண்டும் மீண்டும் சுட்டிக் காட்டுவது போல் ஆகிவிடும்.

5. விழிப்புலனற்ற ஒருவர் அடிக்கடி பயன்படுத்தும் ஓர் இடத்தில் உள்ள பொருட்களை அவசியமின்றி மாற்றி வைக்காதீர்கள், இயலுமானவரை அந்தந்த பொருட்கள் அந்தந்த இடங்களிலேயே இருக்குமாறு பார்த்துக் கொள்ளுங்கள் உதாரணமாக சமையலறை அவர் பயன்படுத்தும் ஓர் இடமாக இருந்தால் கத்தி, கரண்டி, தட்டு போன்ற பொருட்களை அவை இருந்த



இடத்திலேயே வைத்து விடுங்கள். யாதுமொரு அவசியத் தால் அவற்றை மாற்றியமைத்தால் அது பற்றி அவருக்கு அறிவியுங்கள் குறிப்பாக உடையக் கூடிய பொருட்களையும், காயம் ஏற்படுத்தக் கூடிய பொருட்களையும் அவரின் அனுமதியுடன் இடம் மாற்ற மறக்க வேண்டாம்.


6. வீடுகளில் அல்லது கட்டிடங்களில் உள்ள கதவுகளை ஒன்றில் முழுமையாக பூட்டி விடுங்கள். அல்லது முழுமையாக திறந்து வையுங்கள். மாறாக கதவை அரை வாசியாக திறந்து வைத்திருந்தால் கதவை அண்மிக்கும் விழிப்புலனற்ற ஒருவர் அதில் மோதி காயப்படுத்திக் கொள்வார்.

7. விழிப்புலனற்ற ஒருவரை கதிரையில் அமரச் செய்ய வேண்டுமெனின் முடியுமானவரை அவரை கதிரையின் பின் புறமாக அழைத்து வாருங்கள். கதிரையை அண்மித்தவுடன் முதலில் அவரது வலது கையை கதிரையின் சாய்வு பகுதியின் மேல் பக்கத்தில் பிடித்து வையுங்கள். அதே நேரத்தில் கதிரையின் சாய்வு பகுதியை பிடித்த கையை எடுத்து கதிரையின் இருக்கும் பகுதி இருக்கும் பக்கமான முன் நோக்கி அசைத்து கதிரையின் இருக்கும் பகுதி இருக்கும் பக்கத்தை குறிப்புணர்த்துக. அவர் மிக இலகுவாக கதிரையின் பின் புறத்தில் இருந்து முன் புறத்திற்கு வந்து அமர்ந்து கொள்வார். தவிர்க்க முடியாத படி கதிரையின் முன் புறமாக அவரை அழைத்து வர நேர்ந்தால் கதிரையை அண்மித்ததும் அதில் மோதுப்படுவதற்கு முன்னர் நிறுத்துங்கள். பின்னர் அவரது இரு தோள் மூட்டுக்களையும் பற்றி கதிரையில் இருக்கத்தக்க வகையில் உடலின் பின்புறத்தை திருப்புங்கள். பின்னர் தோள் மூட்டுக்களில் மெதுவாக அழுத்தி



கதிரையில் மெதுவாக அமர்த்துங்கள்.

8. விழிப்புலனற்ற ஒருவருக்கு உணவு வழங்கும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய பல விடயங்கள் உண்டு. முதலில் உணவுத்தட்டு மையப்பகுதியில் பிரதான உணவை மட்டும் இடுங்கள் உதாரணம் (சோறு அல்லது பாண்) உப உணவுகளை வட்டமான மணிக்கூடு ஒன்றின் முகப்பில் இலக்கங்கள் காணப்படும் அமைவிடங்களில் ஒத்ததாக வையுங்கள். பின்னர் எந்தெந்த மணிக்கூட்டு இலக்கங்களில் எந்தெந்த உணவுகள் வைக்கப்பட்டுள்ளன. என்பதை அவருக்கு கூறுங்கள் உதாரணமாக 12 மணியில் பருப்புக்கறி, 3.00 மணியில் கத்தரிக்காய் கறி என்றவாறு மாறாக தட்டில் வைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு உணவையும் அவரது கையைப்பிடித்து தொட்டுக் காட்டுவது என்பது அசுசியை ஏற்படுத்தக் கூடிய பொருத்தமற்ற முறையாகும்.




9.உணவு அருந்தும் போது நீர் அருந்தும் பழக்கம் உள்ளவரா என வினவுங்கள். ஆம் என்றால் மட்டும் எப்பொழுதும் அவரது இடது கை பக்கத்தில் நீர் குவளையை வையுங்கள். அவர் அதனை தொட்டு பார்த்து அதன் அமைவிடத்தை இனங்கண்டு கொள்ள உதவுங்கள்.

10. தேனீர் அல்லது அது போன்றதொரு பானத்தை வழங்கும் போது கவனிக்க வேண்டியவை. முதலில் பானம் கொண்டு வரப்பட்டுள்ளதை அவருக்கு அறிவியுங்கள் உடனடியாக அவருக்கு முன்பாக பானத்தை நீட்டுதல் ஆகாது. அவ்வாறு செய்வீர்களானால் அதனைப் பெற்றுக் கொள்ள



அவர் கையை நீட்டும் போது கோப்பையை தட்டிவிடக் கூடும். பானத்தை உங்களுடனேயே வைத்துக் கொண்டு அதை அறிவித்த பின் முதலில் அவர்கையை நீட்டு வதற்கு போதிய இடமளியுங்கள். அவர் கை நீட்டிய பின்பே பானக் கோப்பையின் பிடி அவரது விரல் நுனியில் படுமாறு கோப் பையை நீட்டுங்கள். அது அவர் இலகுவாக பிடியைப்பற்றி கோப்பையில் எடுத்துக் கொள்ள மிக்க உதவியாக இருக்கும்.

தொடரும்....


ஆக்கம்

**வே.சுப்ரமணியம் B A(HONS) DIP IN EDU MET**

தலைவர் மாவட்ட வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம்

வவுனியா

படங்கள்

மா.சி.சிவதாசன்(பொறுப்பாசிரியர்)

"தனு ஆட்" நிறுவனம்



# செய்திச் சாளரம்

**கருவியின் மாற்றுத்திறனாளிகள் தின நிகழ்வு**

கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூக வள நிலையம் 2016ஆம் ஆண்டிற்கான மாற்றுத் திறனாளிகள் தினத்தை கடந்த 03.12.2016 அன்று இல. 37 சேர் பொன். இராமநாதன் வீதி நாச்சிமார் கோயில் அருகாமையில் உள்ள சரஸ்வதி மண்டபத்தில் அனுட்டித்திருந்தது.

கருவிகளின் தலைவர் திரு. க. தர்மசேகரம் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண விவசாய கமநல சேவைகள் கால்நடை அபிவிருத்தி உணவு, நீர் விநியோக நீர்ப்பாசன, சுற்றாடல் அமைச்சர் பொ. ஐங்கரநேசன் அவர்களும், சிறப்பு விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் கௌரவ திரு. த. சித்தார்த்தன் அவர்களும் கௌரவ விருந்தினர்களாக தன்னார்வ வள ஆளணியினர் திரு.ம.செல்வின் அவர்க ளும், யாழ். மாவட்ட சமூக சேவை உத்தியோ கத்தர் திரு. வை. செல்வம் அவர்களும், சட்டத்தரணி செல்வி சி. ஞானலோஜினி அவர்களும் கலந்து சிறப்பித்து இருந்தனர். இந் நிகழ்விற்கான ஆசியுரையினை சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா சுவாமிகள் வழங்கியிருந்தார்.

இந்நிகழ்வில் எமது அங்கத்தவர் களுக்கான வாழ்வாதார உதவிகள், பிள்ளைகளுக்கான கல்வி உதவிகள் என் பன வழங்கப்பட்டன. அத்துடன் சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினத்தை முன்னிட்டு வருடா வருடம் கருவி நிறுவனம் நடாத்தும் கவிதை, சித்திர, ஓவிய சிறுகதைப் போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கான பரிசில்கள் மற்றும் பதக்கங்கள், சான்றிதழ்கள் என்பனவும் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் கலந்து கொண்ட அனைவருக்கும் மதிய விருந்து அளிக்கப்பட்டது. கருவியின் இராகாஸ்சுதி இசைக்குழுவின் இசை இகழ்வுடன் நிகழ்வுகள் இனிதே நிறைவுற்றது. ஒவ்வொரு ஆண்டும் டிசெம்பர் 03 சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினம் உலகளாவிய ரீதியில் கொண்டாடப்பட்டு வருகின்றமை குறிப் பிடத்தக்கது.

**சுதந்திர இலங்கையில் மாற்றுத் திறனாளிகளின் நிலை**

இலங்கையின் 69 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு இலங்கையில் இய லாமை உள்ள மக்களின் சுதந்திரங்களும்

உரிமைகளும் எந்தளவு பேணப்பட்டு பாது காக்கப்பட்டு வருகின்றன என்பது தொடர்பாக வடமாகாண மாற்றுத்திறனாளிகளுக்கான அமைப்புக்களின் ஒன்றியம் (NPCODA) 03.02.2017 அன்று ஒர் ஊடக சந்திப்பினை கிளிநொச்சி NPCODA நிறுவனத்தில் ஏற்பாடு செய்திருந்தது. நிறுவனத்தலைவர் வெ. சுப்பிரமணியம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வடமாகாணத்தில் உள்ள மாற்றுத்திறனாளர்களுக்காக பணியாற்றும் நிறுவனங்கள், ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர் இந் நிகழ்வின் முடிவில் NPCODA ஊடகங்களுக்கு ஒர் அறிக்கையை விடுத்தது. அவ் அறிக்கையில் கூறப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு.

இலங்கை தனது 69வது சுதந்திர தினத்தை கொண்டாடும் தருணம் இது, 1948ஆம் ஆண்டு அடையப்பெற்ற இந்த சுதந்திரத்தின் அனுகூலங்கள் எந்தளவிற்கு இயலாமை யுள்ள மக்களால் அனுபவிக்கக் கூடியதாக உள்ளது என்ற வினா எப்போதுமே அந்த மக்களின் மனதில் ஒரு பூதாகரமான வினா வாக இருந்து வருகின்றது. தங்களது சுதந்தி ரமும் உரிமைகளும் முறையாகப்பேணி பாது காக்கப்படவில்லை என்று அவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர். ஊடக நேயர்களின் நேரம், ஊடகங்களின் இட அளவு என்ப வற்றைக் கருத்திற் கொண்டு, அவற்றில் அரசியல் மற்றும் வாக்களிக்கும் உரிமை, நட மாடும் சுதந்திரம், தகவல் அறியும் உரிமை ஆகிய 3 முக்கியமான உரிமைகளின் மீறல் களை மட்டும் இவ்வறிக்கை சுட்டிக் காட்ட விரும் புகின்றது.

### 1. அரசியல் மற்றும் வாக்களிக்கும் உரிமைகள்

பல இயலாமையுள்ள நபர்கள் வாக் களிக்கும் தகுதியைப் பெற்றிருந்தும், அவர் கள் இயலாமை காரணமாக குடும்ப அங்கத் தவர்களும் கிராம சேவை அதிகாரிகளும் அவர்களை வாக்காளர்களாக பதிவதை தவிர்க்கின்றனர்.

வாக்களிப்பு நிலையங்கள் அவர் களுக் கேற்ற அணுகும் வசதிகளைக் கொண்டிருப் பதில்லை.

வாக்களிப்பு நிலையங்களை மாடிகளில் அமைக்கும் போது சக்கர நாற்காலிகளில் வருகை தருவோர் பலத்த சிரமங்களை எதிர் நோக்குகின்றனர்.

விழிப்புலனற்ற வாக்காளர்களுக்கு ப்ரெயில் வாக்குச் சீட்டுக்கள் இல்லை.

செவிப்புலனற்ற வாக்காளர்களுக்கு தொடர்பாடல் வசதிகளை வழங்க வாக் களிப்பு நிலையங்களில் சைகை மொழி பெயர்ப்பாளர்கள் இருப்பதில்லை.

உளவள ஆலோசனை அல்லது உளந லன் சிகிச்சை பெறும் நபர்கள் கூட புத்தி



சுவாதீனமற்றவர்கள் என்ற முத்திரை குத்தப்பட்டு, குடும்ப அங்கத்தவர்களாலும் கிராமசேவை அதிகாரிகளாலும் வாக்களிக்க அனுமதிக்கப்படுவதில்லை.

படுத்தபடுக்கையாகவுள்ள இயலாமை யுள்ள மக்கள் வாக்களிக்க விசேட ஏற்பா டுகள் எதுவுமில்லை.

வாக்களிக்க விரும்புகின்ற ஆனால் பொது போக்குவரத்து வாகனங்களில் பய ணம் செய்ய முடியாத சொந்த வாகன வசதி கள் இல்லாத வாக்காளர்களுக்கு தேர்தல்கள் திணைக்களத்தினால் வழங்கப்படும் போக் குவரத்து வசதிகளைப் பயன்படுத்திக் கொள் வது சிரமமான நிர்வாக நடைமுறையைக் கொண்டிருக்கிறது.

வாக்களிப்பு நிலையங்களுக்கு வருகை தரும் இயலாமையுள்ள வாக்களர்களை கையாளுவதற்கு வாக்களிப்பு நிலையங் களில் பணியாற்றும் அதிகாரிகள் போதிய அறிவையும், பயிற்சியையும் பெற்றி ருப்பதில்லை.

அரசியற் கட்சிகள் இயலாமையுள்ள மக்களின் வாக்குகளை பெற்றுக் கொள் வதில் காட்டும் ஆர்வமளவிற்கு அவர்களுக்கு தமது கட்சிகளில் அங்கத்துவம் வழங்கு வதற்கோ அவர்களை தமது வேட்பாளர்களாக நிறுத்துவதற்கோ ஆர்வம் காட்டுவதில்லை.

பாராளுமன்றத்திலோ மாகாண சபைக ளிலோ உள்ளூராட்சி மன்றங்களிலோ இயலாமையுள்ள மக்களின் பிரதி நிதித் துவம் இன்மையினால் அவர்கள் தொடர் பான சட்டங்களும், கொள்கைகளும் மற்றவர் களினாலேயே இயற்றப்படுகின்றன.

## 02. நடமாடும் சுதந்திரம்

வீதிகள் இயலாமையுள்ள நபர்கள் சுதந் திரமாக சென்றுவரக் கூடிய அணுகும் வசதி களைக் கொண்டவையல்ல

புகையிரத நிலையங்களும் பேருந்து நிலையங்களும் பேருந்து தரிப்பிடங்களும் இயலாமையுள்ள மக்கள் சுதந்திரமாக பயன் படுத்த முடியாதபடி பல குறைபாடுகளைக் கொண்டிருக்கின்றன.

புகையிரதம், பேருந்து போன்ற பொது போக்குவரத்து வாகனங்களில் இயலா மையுள்ள மக்களும் சுதந்திரமாக பய ணிக்கக் கூடிய வசதிகள் மிக மிகக் குறைவு இருக்கும் ஒரு சில வசதிகளையும் அனு பவிக்க மற்றவர்கள் அனுமதிப்பதில்லை.

விழிப்புலனற்றோர் நடமாடுவதற்கு பயன்படுத்தும் வெள்ளைப் பிரம்பு அதற்கான அங்கீகாரத்தை மக்கள் மத்தியில் சம்பிரதாய பூர்வமாகப் பெற்றிருக்கின்றதே ஒழிய, அதற்கு சட்ட அங்கீகாரம் கிடையாது.

செவிப்புலனற்றோர் தமது இயலா மையை உறுதிப்படுத்தக் கூடிய பதிவுகள் எதுவும் அடையாள அட்டையில் இல்லா தபடியாலும், மற்றவர்கள் அவர்களின் இயலாமையை இலகுவில் அடையாளம் கண்டு கொள்ள முடியாதபடியாலும், வீதி களில் அவர்கள் பல்வேறு பாதுகாப் புப்பிரச்சினைகளை எதிர்கொள்ள நேரிடு கின்றது.

இயலாமையுள்ள பெண்களும் சிறுமி களும் அதிலும் மனவளர்ச்சி குன்றிய பெண் களும் சிறுமிகளும் மற்றவர்களின்

உதவியின்றி, தனித்து தங்கள் இல்லங்களை விட்டு வெளியே சென்று வருவது பாலியல் துஸ்ப்பிரயோகம் போன்ற பாதுகாப்பு இன்மைகளை தோற்றுவிக்கின்றது.

படுத்த படுக்கையாக உள்ள தீவிர இயலாமை கொண்ட மக்களைப் பொறுத்த வரையில் அவர்கள் தமது தேவைகளுக்கு வெளியே சென்று வருவதற்கு விசேட சமூக நலன் ஏற்பாடுகள் எதுவுமில்லை. பொதுக்கட்டடங்கள் அணுகு வசதிகளைக் கொண்டிருக்க வேண்டும் என்ற சட்டங்கள் இருப்பினும் அவை நடைமுறைப்படுத் தப்படாததால் இயலாமையுடன் கூடிய மக்கள் சுதந்திரமாக நடமாடுவதற்கும், ஏனைய சேவைகளைப் பெறுவதற்கும் கஸ்டப்படு கின்றார்கள்.

3. தகவல் அறியும் உரிமை

அச்சு வடிவில் சாதாரண மக்களுக்கு வழங்கப்படும் அரச தகவல்கள் எவையும் விழிப்புலனற்ற மக்களுக்கு ப்ரெயில் எழுத்து வடிவில் வழங்கப்படுவதில்லை.

தொலைக்காட்சி செய்திகளை செவிப்பு லனற்றோரும் கேட்டுப் பயன்பெறும் வகை யில் அவை சைகை மொழியில் ஒளி பரப்பு செய்யப்படுவதற்கு மிக, மிக குறைந்த முன்னு ரிமையையே வழங்கப்படுகின்றது. அல்லது வழங்கப்படுவதில்லை என்றே கூறிவிடலாம்.

பல பெருந்தெருக்களில் விழிப்புலனற்ற பாதசாரிகள் பயன்பெறக் கூடிய ஒலி சமிக் ஞைகளோ செவிப்புலனற்ற பாதசாரிகள் பயன்பெறக் கூடிய ஒளிச் சமிக்ஞைகளோ இல்லை.

புகையிரத நிலயங்களில் விழிப்புலனற்ற பயணிகளுக்கு உதவக்கூடிய வகையில் ஒலிபெருக்கி அறிவிதல்களிருப்பினும் அவை எல்லாப் பேருந்து நிலையங்களிலும் காணப்படவில்லை செவிப்புலனற்ற பயணி களுக்கு தகவல்கள் வழங்கக் கூடிய விதமாக கட்புலக் காட்சிப்படுத்தும் அறிவித்தல்கள் புகையிரத நிலையங்களிலும், பேருந்து நிலையங்களிலும் போதுமான அளவு இல்லை இத்தகைய சுதந்திரங்களும் உரிமை களும் மறுக்கப்பட்ட ஒரு நிலையில் தாம் இந்த நாட்டின் சுதந்திரப் பிரஜைகளா என்ற சந்தேகம் இயலாமையுள்ள மக்கள் மனதில் தோன்றுவது இயல்பே.

குடா நாட்டிலேயே அதிக வசதிகள் கூடிய பெரிய தனியார் மருத்துவமனை, இதில் மகப்பேற்று வாட்டின் முன் உள்ள சிறிய வறாண்டாவில் அந்தச் சுவருக்கும் இந்தச் சுவருக்கும் நிற்காத பெண்டுலம் (Pendulam) போல கதிரேசன் நடந்து கொண்டிருந்தான்.

இந்த ஏசிக் குளிருலும் கூட அவன் முகம் வேர்த்திருந்தது. அவ்வளவு பதட்டமும், பதகளிப்புடனும் காணப்பட்டான். தம்பி கதிரேசா இப்படி வந்து கொஞ்சம் இரு அவளுக்கு ஒன்றும் நடக்காது என்ற அக்காவின் அழைப்பைக் கூட காதில் வாங்காது அறையின் கதவையே பார்த்து நடந்தான்.

அவன் தவிப்பை புரிந்தது போல கதவுகள் திடீரென திறக்கப்பட்டது. ஆர்வம் மிகுதியால் கிட்ட ஓடிப்போன கதிரேசன் வெளிப்பட்ட நெர்ஸிடம் என்ன? குழந்தை பிறந்திட்டுதா? பொம்பிளைப்பிள்ளை தானே? என்ற தன் விருப்பத்தை தன் கேள்வியில் காட்டினான்.


நேர்ஸ் கொஞ்சம் தயங்கியவளாக இல்லை சேர் குழந்தை என்னும் பிறக்கவில்லை உடனே நீங்கள் கீழே போய் அறை இலக்கம் ஐந்தில் பெரிய டொக்டரை சந்தியுங்கோ. இல்லாட்டில் பறவாயில்லை என்னோடு வாங்கோ என்று கூறி விட்டு பதிலுக்கு காத்திராமல் தாதி முன்னே நடந்தாள்.

தாதியின் பதிலைக் கேட்டதும் எழுந்து வந்த மரகதம் என்னவாம் தம்பி? என்ற கேள்வியுடன் ஓடி வந்தாள். கதிரேசன் மூளை அக்காவின் கேள்வியைக் கூட கிரகிக்கவில்லை. மனைவிக்கு என்னவோ ஏதோ என்று பயந்து போனவன் தாதியின் பின் எட்டி நடந்து பிள்ளை! அவவுக்கு ஒன்றுமில்லைத்தானே என்று பதட்டத்துடன் கேட்க ஒன்று மில்லை ஐயா நீங்கள் பயப்பட வேண்டாம் குழந்தை பிறக்கிறதில தான் சின்னப் பிரச்சினை இருக்கு போல, எதுக்கும்

## சிறுகதை

டொக்டரிடம் கதையுங்கோ கெதியா வாங்கோ என்று தாதி அவசரப்படுத்தினாள்.

கதிரேசனுக்கு! மனைவிக்கு தற்சமயம் ஒன்றுமில்லைஎன்பதில் ஆறுதலடைந்தாலும் மனதில் ஓர் பதட்டம்.குழந்தைபிறக்கிறதில் ஏதும் சிக்கலா?



அல்லது

குழந்தைக்கு ஏதாவது ஆகிவிட்டதா? என்னதான் பிரச்சினை என்று அவனது மனம் கேட்டவாறு வைத்தியரின் அறையை அடைந்தார்கள். வைத்தியர் முகத்திலும் சிறிய பதட்டம் சோக ரேகையும் மந்தமான பார்வை யுமாகி அவரும் குழப்பத்திலிருப்பது போல குறிப்பால் உணர்த்தினார்.

வைத்தியர், ஏதோ சொல்ல வெளிக்கிட அவரின் வார்த்தையை முந்திக் கொண்ட கதிரேசன் டொக்ரர் என்ர மனைவிக்கோ பிள்ளைக்கோ ஒன்றுமில்லைத்தானே! என்று அவர் பதில் வரவேண்டும் என்பதை தன் கேள்வியாக்கினான்.

சந்தர்ப்பத்தையும் காலநேரத்தையும் புரிந்து கொண்ட வைத்தியர் தன் முகத்தை என்னும் கொஞ்சம் இறுக்கமாக்கிக் கொண் டார். இப்போதைக்கு அப்படி சொல்லேலாது உங்கட மனைவியைப் பார்த்த டொக்டர் பார்த் ததிலையே எக்ஸ்றே,இஸ்கான் ஒரு தடவைக்கு நான்கு தடைவ பார்த்தாச்சு, பிள்ளை சுகப் பிரசவமாக பிறக்க முடியாது காணப் படுவதாகவும், பிள்ளையின் எக்கோரெஸ்ட் கூட அவ்வளவு நல்லதாய் தெரியவில் லையாம். வைத்தியர் முற்றாக கூறி முடிக்கும் முன் மரகதம் இடையில் குறுக்கிட்டாள்.

அப்ப இப்ப என்ன செய்யிறது டொக்ரர்? போன மாதக் கிளினிக்கிலையும் மச்சாளுக்கு எல்லாம் சரியாக இருக்கு சுகப்பிரசவம் என்றுதானே உங்கட டொக்ரர் சொன்னவர். அவவுக்கு போட்ட டேற்றிலயும் என்னும் ஐந்து நாள் இருக்குத்தானே! இதனைக் கேட்ட வைத்தியர் கொஞ்சம் கடுப்பாகி அது அப்ப இருந்த நிலைமையம்மா இது இப்ப இருக்கும் நிலைமை வேறை. இரண்டு உயிரையும் காப்பாத்த வேண்டுமென்றால் உடனே ஒப்பிரேசன் செய்துதான் பிள்ளையை எடுக்க வேணும். வைத்தியர் கூறியதை கேட்ட கதிரேசன் மனைவியை காப்பாற்ற வேறு வழி யில்லை என்றதால், சரி டொக்ரர் எத்தினை ஆயிரமானாலும் பரவாயில்லை கெதியாக ஒப்பிரேசன் செய்யிறதுக்கு ஆயத்தம் செய்யுங்கோ.

எங்க எங்க கையெழுத்து வைக்கவேணும் எண்டு மருத்துவமனையின் போமாலிற்றியை முதல் தெரிந்தவன் போன்று கையெ முத்துவைக்க தயாரானான். நேர்ஸ் காட்டிய பல பக்கங்களில் அவன் கையெழுத்து உறுதி யானது. இருந்தாலும் அவன் மனதில் எழுந்த கேள்வி அவன் மனதை உறுத்த, டொக்ரர் சும்மா குத்தெண்டுதானே கொணந்தனாங்கள் அது எப்படி? என்று வைத்தியரின் முகத்தைப்பார்த்து அடுத்து வந்த கேள்விக்கும் முற்றுப்புள்ளி வைத்தான்.

வைத்தியரின் முகத்தில் கோபம் கொப்பளித்தது. பெரிய கிறிற்றிக்கல்லான கேசை இவ்வளவு லேற்றா கொணர்ந் திருக்கின்றீங்கள். பத்து நிமிசம் பிந்தி யிருந்தால் கூட உன் மனைவியை உயிருடன் பார்த்திருக்க முடியாது. அது போக என்னத்தில் கொண்டு வந்தனிங்கள் ஆட்டோவிலோ? இதையெல்லாம் சொல்லிப்புரியாது மனைவி உயிரோடு வேணுமோ இல்லையோ என்பது போல அவர் பார்வையமைய கதிரேசன் கலங்கிப் போய் கையறு நிலையில் மௌன மானான். ரெலிபோனின் ரிசீவரை கையில் எடுத்த வைத்தியர் மறுமுறையில் இருந்த வைத்தியரிடம் டொக்ரர் உடனே ஒப்பிரே சனுக்கு ரெடியாகுங்கோ என்று ரெலிபோனை துண்டித்து எதையோ சாதித்த சந்தோசத்தில் சரி சரிமேலே போய் உங்கட அறையில இருங்கோ அரைமணி நேரத்திற்கு மேல்

செல்லும் மற்ற ஒழுங்குகளை செய்யுங்கோ என்று கூறிவிட்டு விறு விறு என்று வேகமாக தியேட்டரை நோக்கி நடக்கத் தொடங்கினார்.

இந்த நிலைமையில் தன்னை மறந்து போன கதிரேசன் பாத்தியா அக்கா டொக்ரர் சொல்லிப்போட்டுப்போறத பத்து நிமிசம் பிந்திக் கொணர்ந்தால் என் மனைவியை இன்று உயிரோடு பாத்திருக்கேலாதாம்.

அவனுக்கு ரண்டு போட விடாமல் தடுத்துப் போட்டாய் நாங்கள் வந்த அவசரம் தெரியாமல் அந்த கண்ணில்லாத நாய் எங்கட ஆட்டோ விற்குள் விழாவிட்டால் அரை மணித்தியாலம் முன்னுக்கு கொண்டு வந்திருக்கலாம். உந்த குருடுகள் சொத்தியளுக்கெல்லாம் வீட்டில இருக்க முடியாமல் ஏன் தான் றோட்டுக்கு வருகுதுகளோ! தம்பி கொஞ்சம் சும்மா இருடா என்று அக்கா தடுக்கவும். அவன்ர வாய்க் கொழுப்பை பார்த்தியா அக்கா? வந்து முன்னுக்கு விழுந்ததும் பத்தாமல் கண்ணிருக்கிற நாங்கதான் பார்த்து வந்தி ருக்கவேணுமாம். றோட்டில போறவங்க ளுக்கும் வேலையில்லை.

அவனுக்காகத்தான் பரிஞ்சு பேசி நியாயம் கேட்டு எங்களை அரைமணித்தியாலம் தடுத்துப் போட்டாங்கள் சரி போனால் போகட் டும் என்று சனம் சொன்னதுக்காக மருந்து கட்ட கொடுத்த காசையும் திருப்பி எங்கட மூஞ் சையில் சுழட்டி எறிஞ்சு போட்டு போட்டான். எவ்வளவு திமிர் அவனுக்கு. நான் மனிசன் இல்லையாம். மனிசப்பண்பு இல்லாதவனிட்ட காசு வேண்டுறது தனக்குத்தான் கேவலமாம்! அதுக்குள்ளயும் அதில ஒருவர் அவைய ளையும் சமமாக மதிக்கப்பழக வேண்டுமாம் என்று புதுசு புதுசாக சட்டம் கொணர்ந் திருக்கினமாம். கதிரேசனின் கோபம் சொற்களில் சிதறியது. அக்கா மரகதத்திற்கு பொறுக்க முடியவில்லை. தம்பி இப்படி யெல்லாம் பேசாதே? நீ அந்த இடத்தில பேசின தைக் கூட உன்ர ரென்ஸன் எண்டு விட்டுட்டன் அப்படி நீ பேசியிருக்கக் கூடாது. தேவை யில்லாமல் இஞ்சையும் இந்தக் கதையை கதைக்காமல் கொஞ்சம் அமைதியாக இரு பக்கத்தில் ஆக்கள் இருக்கினம் என்று கதி ரேசன் வாயை அடைத்தாள.

அந்த நேரம் பார்த்து தியேட்டர் அறையின் கதவுகள் திறக்கப்பட கதிரேசனின் மனை வியும் பிள்ளையும் வண்டிலில் கிடக்க வாட் பையன் வண்டிலை தள்ளிக்கொண்டே வெளியில் வருகிறான். அவனைத் தொடர்ந்து மருத்துவரும் ஒரு தாதியும் தொடர்ந்து வருகின் றனர். ஆர்வ மிகுதியால் கதிரேசனும் அவனது அக்காவும் ஒடிப்போய் தள்ளு வண்டியில் இருந்த மனைவியையும் பிள்ளையையும் பார்க்கின்றனர். மனைவி அரை மயக்கத்திலும் குழந்தை கைகள் இரண்டையும் அசைத்து ஏதோ சொல்ல வருவது போல கண்களை சிமிட்டிப் பார்க்கின்றது. குழந்தையின் முகத் தைப்பார்த்த கதிரேசன் சந்தோசத்தில் பூரித்துப் போய்விடுகின்றான். துணியால் சுற்றப் பட்டிருந்த குழந்தையின் கைகளையும் முகத் தையும் பார்த்த கதிரேசன் என்ன கலர் என்ன வடிவு இவள் தனது ஆசையைப் போல உலக அழகியாய்ப் பிறந்து விட்டாள் என பெருமிதம் கொண்டான்.

கதிரேசனின் அருகில் வந்த வைத்தியர், கைகளை கதிரேசன் பற்றிக் கொண்டு நன்றி டொக்ரர் என்ர மனைவியையும் பிள்ளை யையும் காப்பாற்றித்தந்ததற்கு வைத்தியரின் கைகளைப் பற்றிய போது அவன் ஆனந்தக் கண்ணீர் இரண்டு துளிகள் வைத்தியரின் கைகளை நனைக்கின்றது.

இதனைக்கண்ட வைத்தியர் செய்வ

தறியாது சற்றுத் தயங்கியவராக தம்பி! நான் சொல்லுறதக் கொஞ்சம் கேளுங்கோ உங்கட மனைவிக்கு இனி ஒன்றுமில்லை பிள்ளைதான் என்று முடிப்பதற்குள் கதிரேசன் குறுக்கிட்டான் பிள்ளைக்கு என்ன டொக்ரர் என்று அவசரமாக கேட்டான்.

ஒன்றுமில்லை தம்பி பிள்ளை வயிற்றிலேயே வளர்ச்சியில் ஒரு கால் சிறியதாகவும் வளர்ச்சி குன்றியதாகவும் பிறந்துள்ளது இதைப்பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம். இப்பவுள்ள நவீன வசதிகளால் பிள்ளையை நடக்க வைக்க முடியும். ஒன்றுக்கும் நீங்கள் யோசிக்க வேண்டாம் பிள்ளைக்கு கனக்க ரெஸ்ட் எடுக்க வேண்டியிருக்கு இருந்தாலும் ஒன்பது மாதத்திற்கு பிறகு தான் உறுதியாக சொல்ல முடியும் என்று கூறி முடித்தார்.

இதனைக் கேட்ட கதிரேசன் என் ஐந்து மகன்களுக்கு ஒரு மகள் தவம் கிடந்து பெற்ற மகள் நடக்கமாட்டாளா? என்றவன் கதிரையில் மயங்கி சாய்கின்றான்.

அகரன்
சங்கானை

# எண்ணக் கிண்ணம்

## ஊனமும் உயரே தூக்கி விடும் ஏணி

எல்லோருக்குமே வாழ்க்கை ஒரு முறைதான்
வலுவிழந்தோருக்கும் அதே விதிப்படிதான்
காட்டிலே எறித்த குளிர் நிலவாக
மடித்து வைக்கப்பட்ட கவிதையாக
பயன் ஏதும் இல்லாமல் பாழாகிப் போகாதே
மாற்றுத்திறனை மையப்படுத்தி வலுவூட்டி
ஊக்கமாய் நம்பிக்கையோடு செயலாற்று
தருவதை தின்று வாழும் கூட்டுப் பறவையாய்
தங்கி வாழ்வதும் வாழ்வாகுமா?
விரிந்த உலகம் வெளியே இருக்க
புரியாமல் வீணே பழுது படலாமா
ஊனத்தைக் காட்டி யாசகம் கேட்டு
மானம் கெட்டு மதிப்புக் கெடாதே
மாணவப் பருவத்தில் கல்வியைத்தேடு
பருவவயதிலிலே பயின்று கொள்வதற்கு
பரவலாக பல வாய்ப்புக்கள் இருக்க
பருவத்தோடு பயிர்செய்து விளைச்சலை
காற்றுள்ள போதே தூற்றிக்கொள்
வலுவிழப்பை வாய்ப்பாக மாற்றும்
சித்து விளையாட்டு சித்திக்குமே யாயின்பின்
மொத்தமாய் நீயும் முழு மனிதன் ஆகலாம்
நித்தம் நித்தம் மாறுகின்ற உலகத்தில்
ஒத்தது அறிவானே உயிர்வாழ்வான்
மற்றையான் வாழாது வாழும் வீணன்
தன் கருமம் செய்ய தலைப்பட்டவனுக்கு
ஊனமும் உயரே தூக்கி விடும் ஏணி
திடமான மனதோடு போராடுபவனுக்கு
எவரெஸ்டும் எட்டித்தொடுகின்ற உயரம்தான்
போட்டிச் சமூகத்தோடு நீயும் சேர்ந்துவிடு
வெற்றிக் கேடயம் ஒரு நாள் உன் கையில்

சு. சிவராசா, கொக்குவில்




### வலிகளை உரமாக்கி எழுந்த உலக விருட்சங்கள்

# மனதை வென்ற மங்கை

நா. கீதாகிருஷ்ணன்,
நயினாதீவு.



## நோலியா கரெல்லா
## (Noelia Garella)

வலிகளை உரமாக்கி எழுந்த உலக விருட்சங்கள் எனும் இப் பகுதியில் இது வரை பார்வை இழந்தோர், செவிப்புலனற்றோர், கை கால் பாதிப்புற்றோர். முள்ளந்தண்டுவடம் பாதிப்புற்றோர் என அங்கக் குறைபாடு உடையவர்களின் வரலாறுகளையே படித்துள்ளோம். இவ்வேளையில் அறிவுசார் (மனவளர்ச்சி குறைபாடு) குறைபாடு உடையோரது வரலாற்றினையும் பதிவு செய்ய வேண்டும் எனச் சிந்தித்த போது இணையத்தில் கிடைத்த ஒரு பதிவை இங்கு பதிவு செய்கின்றேன்.

அறிவு சார் குறைபாடுகளுள் ஒன்றான டவுண் சிண்ட்ரோம் (Down Syntrome) எனப்படும் மன நலிவுக் குறைபாடு உடையவர்கள் வாழ்க்கையில் முன்னேறுவது கடினம் என்று தான் சொல்வார்கள். ஆனால் இக் குறைபாடு உள்ள ஒருவர் கல்வி கற்று ஆசிரியர் ஆனார் என்றால் யாரும் நம்புவார்களா? ஆம் நம்பத்தான் வேண்டும் ஆர்ஜென்ரினாவை சேர்ந்த மன நலிவுக் குறைபாடுடைய நோலியொ கரெல்லா என்பவர் தான் மன நலிவுக் குழந்தைகளுக்கு கற்பிக்கும் ஆசிரியராக பணியாற்றி வருகின்றார். இவரது வரலாற்றினைப் பார்ப்பதற்கு முன் டவுண் சிண்ட்ரோம் என்பது பற்றி சிறிது தெரிந்து கொள்வோம்.

டவுண் சிண்ட்ரோம் எனப்படும் மன நலிவுக் குறைபாடு ஏற்படக் காரணம் யாதெனப் பார்ப்போமானால் பொதுவாக உடலில் உள்ள ஒவ்வொரு செல்லிலும் மரபுப் பண்புகளை உள்ளடக்கிய குரோமோசோம்கள் இருக்கும். இவை வலைப் பின்னல் அமைப்பில் ஒவ்வொரு செல்லிலும் 23ஜோடி என்ற எண்ணிக்கையில் அமைந்திருக்கும். கரு உருவாக்கத்தில் தாய் தந்தையிடம் இருந்து பெறப்படும் 23குரோமோசோம்கள் இணைந்து புதிதாக 23ஜோடி குரோமோசோம் அமைப்பு உருவாகும். இந்த குரோமோசோம் இணைவின் போது தாய் அல்லது தந்தையிடம் இருந்து பெறப்படும் 21வது குரோமோசோமுடன் அதன் நகலும் கூடுதலாக சேர்ந்துவிடும் பொழுது 46குரோமோசோம்களுக்கு பதிலாக ஒவ்வொரு செல்லிலும் 47 குரோமோசோம்கள் இருக்கும். குரோமோசோம்களின் இந்த பிறழ்வுதான் டவுண் சிண்ட் ரோம் எனப்படுகின்றது. உலகில் பிறக்கும் குழந்தைகளில் 200 பேரில் ஒருவர் இக் குறைபாட்டுடன் பிறப்பதாக ஒரு புள்ளி விபரம் தெரிவிக்கின்றது.

டவுண் சிண்ட்ரோம் எனப்படும் மன நலிவுக் குறைபாடு உடைய குழந்தைகளின் உடல் மற்றும் மன வளர்ச்சியில் மந்தத் தன்மை இருக்கும் இதனால் சாதாரண குழந்தைகளுடன் ஒப்பிடும் போது தவழ்தல் உட்காருதல் போன்ற செயற்பாடுகளை செய்ய இவர்களுக்கு இரு மடங்கு காலம் எடுக்கும். அத்துடன் இக் குறைபாடு உடையோருக்கு வேறு உடல் ரீதியான சில சிக்கல்களும் இருக்கும்.

மன நலிவுக் குறைபாட்டினால் இக் குழந்தைகளின் உடல் உள்ளம் பாதிப்படைவதுடன் கற்றல் செயற்பாடுகளும் பெரிதும் பாதிப்படைகின்றன. அன்றைய காலத்தில் இக் குறைபாடு உடைய பிள்ளைகளை வீட்டுக்குள்ளேயே முடக்கி வைத்திருந்தனர். இன்றும் கூட இந் நிலை முழுமையாக மாறி விட்டது எனக் கூற முடியாது. ஆனாலும் நாளுக்கு நாள் வளர்ந்து வரும் நவீன உலகம் இவர்கள் மீதும் தனது பார்வையை செலுத்தியுள்ளது. இதன் ஒரு வெளிப்பாடாக இக் குழந்தைகளுக்கும் கல்வி வழங்க ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன. இதன் விளைவாக எமது நாடு உட்பட பல நாடுகளில் விசேட கல்வித் திட்டத்தின் கீழ் இவர்களுக்கு பாடசாலை



சென்று ஓரளவேனும் கற்க வாய்ப்புக் கிடைத்துள்ளது. பெற்றோர் மற்றும் விசேட கல்வி ஆசிரியர்களின் அதீத முயற்சிகளால் இக் குறைபாடு உடைய குழந்தைகளை ஓரள வேனும் முன்னேற்ற முடிந்துள்ளது. இன்று மன நலிவுக் குறைபாடு உடைய ஒருவர் பல தடைகளைத் தாண்டி கல்வி கற்று டவுண் சின்ட்ரோம் குழந்தைகளுக்கு கற்பிக்கும் ஆசிரியராக உருவாகி சாதனை படைத்துள்ளார்.

ஆம் அவர் தான் ஆர்ஜென்டினாவைச் சேர்ந்த நோலியா கரெல்லா என்பவர். டவுண் சிண்ட்ரோம் குறைபாட்டுடன் பிறந்த இவரை பெற்றோர் சிறு வயதில் இவரை பாடசா லையில் சேர்க்க எடுத்த முயற்சிகள் யாவும் தோல்வி அடைந்தன. இதனால் இவரது பெற்றோர்கள் கடுமையாகப் போராடித்தான் இவரை ஓர் பாடசாலையில் சேர்த்தனர். நேலியா பல இன்னல்களையும் சவால் களையும் வெற்றிகரமாக முறியடித்து தடைக் கற்களை எல்லாம் படிக்கற்களாக்கி 25வருட காலம் பயணித்து தனது வெற்றி இலக்கை அடைந்துள்ளார். 2012இல் டவுண் சிண்ட்ரோம் குழந்தைகளுக்கு பாடம் கற்பிக் கும் ஓர் ஆசிரியராக பதவி ஏற்றார். இதன் மூலம் உலகின் முதலாவது டவுண் சின்ரோம் எனபடும் மன நலிவுக் குறைபாடுடைய ஆசிரியர் என்ற பெருமையை தனதாக்கி சாதனை பட்டியலில் தனது பெயரினை பதிவு செய்துள்ளார்.

32 வயதான நோலியோ கரெல்லா இது பற்றிக் கூறும் போது "எனக்கு சின்ன வயதி லேயே ஆசிரியர் வேலை பிடிக்கும் அதனால் நான் ஒரு ஆசிரியர் ஆக வேண்டும் என்று ஆசைப்பட்டேன் அந்த ஆசை இப்போது நிறைவேறியுள்ளது. என்கின்றார்.

தற்போது இவர் 3 வயதிற்கு மேற்பட்ட டவுண் சின்ட்ரோம் குழந்தைகளுக்கு பேசும் பழக்கத்தை ஏற்படுத்தும் ஆசிரியராக பணி புரிகின்றார். இது பற்றி இவர் கூறும் போது "இந்தக் குழந்தைகள், சின்ன வயதில் நான் எப்படி இருந்தேனோ அப்படியே இருக் கிறார்கள். அவர்கள என்னைப் போலவே கற்றுக் கொள்ள விரும்புகிறார்கள்". என்று சோகத்துடன் கூறினார்.

குழந்தைகளோடு குழந்தைகள் போல் பழகி பாடம் சொல்லிக் கொடுக்கும் நோலியோ அவர்களின் விருப்பத்திற்கு உரிய ஆசிரி யராகத் திகழ்கின்றார். இவரை பாடசாலை அதிபர்,ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் பெற்றோர் என அனைவரும் பாராட்டி உற்சா கப் படுத்துகின்றனர். இதன் மூலம் மன நலிவுக் குறைபாடு உடையவர்கள் தொடர் பாக அபிப்பிராயம் சமூகத்தில் மாறி வரு வதை இட்டு தான் மகிழ்வடைவதாக கூறு கின்றார் நோலியோ கரெல்லா.

டவுண் சிண்ட்ரோம் எனப்படும் மன நலிவுக் குறைபாடு தொடர்பான விழிப் புணர்வை சமூகத்திற்கு ஏற்படுத்தும் பொருட்டு ஐ.நா. 2011ஆம் ஆண்டு முதல் ஒவ் வொரு ஆண்டும் மார்ச் 21ஆம் திகதியினை உலக டவுண் சிண்ட்ரோம் (World Down synfrome day) தினமாக பிரகடனப் படுத்தியுள்ளது.

எனவே மன நலிவுக் குறைபாடு உடைய பிள்ளைகளின் வாழ்வியல் மேம்பாட்டிற்கு அவர்களது பெற்றோர் வழி காட்டியாக இருந்து அவர்கள் வாழ்வினையும் வளமாக்க வேண்டும்.




# தசரசம்

தொகுப்பு : நா.கீதாக்கிருஷ்ணன

**1. இலக்கியம்**

தத்தித்தா தூதுதி தாதூதித் தத்துதி
துத்தித் துதைதி துதைதத்தா தூதுதி
தித்தித்த தித்தித்த தாதெது தித்தித்த
தெத்தாதோ தித்தித்த தாது:

பாடியவர் : காளமேகப் புலவர்

பாடல் : வித்தாரச் செய்யுள்

பொருள்

தத்தி தாது ஊதுதி - தாவிச் சென்று பூந்தாதினை ஊதி உண்கின்றாய். தாது ஊதித் துத்தி - பூந் தாதினை ஊதிஉண்ட பின்னர் மீளவும் தாவி எங்கோசெல்கின்றாய். துத்தி துதைதி - துத்தி என ரீங்கார ஒலி எழுப்பிய படியே மற்றொரு பூவினை நெருங்குகின்றாய். துதைந்து (துதைத்து என விகாரமாயிற்று) அத்தா

ஊதுதி - அப்பூவினை அணுகி அதனிடத்துப் பூந்தாதினையும் ஊதி உண்கின்றாய். தித்தித்த தித்தித்த தாது எது - நினக்கு இனிப்பாய் இருந்த பூ எதுவோ : தித்தித்தது எத்தாதோ-இனித்திருந்தது எதன் மகரந்தமோ தித்த தாது இதழால் அழகியதும் எப்பூவோ?

வண்டுடே - நீ மலர்களில் தாவிச் சென்று பூந் தாதினை ஊதி உண்கின்றாய். அதனை உண்டபின் மீளவும் தாவி எங்கோ செல்கின் றாய் பின் துத்தி என ரீங்கார ஒலி செய்த வாறு மற்றொரு பூவினை நெருங்கி அதன் பூந் தாதினையும் ஊதி உண்கின்றாய். எனவே உனக்கு இனிப்பான தித்தித்த பூ எதுவோ இனித்திருந்தது எதன் மகரந்தமோ? இதழால் அழகியது எப்பூவோ? (சொல் என வண்டிடம் கேட்பது போல் இப் பாடல் அமைந்துள்ளது?

**2. மியன்மார்**



(மியன்மார் ஒன்றியக் குடியரசு Republic of the union of Myanmar)

- தலை நகர் :- நைப்பியிதோ (2006)_

- ஆட்சி மொழி :- பருமிய மொழி
- பிராந்திய மொழிகள் :- ஜிங்போ, காயா, காரென், சின், மொன், ரக் கைன், சான்
- இனக்குழு :பாமர்கள் (68%) ஷான் (9%) காரென் (7%) ரக்கைன் (4%) சீனர் (3%) இந்தியர் (2%) மொன் (2%) வேறு (5%)
- சமயம் :- பௌத்தம்
- அரசாங்கம் :- ஒற்றையாட்சி நாடாளுமன்றக் குடியரசு
- மேலவை :- தேசிய இனங்களின் இல்லம்
- கீழவை :- பிரதி நிதிகளின் இல்லம்
- புதிய அரசியல் அமைப்பு :- 30 மார்ச் 2011 நடை முறைக்கு வந்தது.
- பரப்பளவு :- 676km²
- மக்கள் தொகை :- 51 486 253 (2014 கணக் கெடுப்பு)
- நாணயம் :- பர்மிய கியத் (K) (MMK)

தென் கிழக்கு ஆசியாவில் உள்ள இறை மையுள்ள நாடு. இதனை சூழ வங்களாதேஷ், இந்தியா, சீனா, லாவோஸ், தாய்லாந்து போன்ற நாடுகள்; உள்ளன.

1989இல் பர்மா என்ற நாட்டின் பெயரை மியன்மார் என மாற்றினர்.

1948ஜனவரி 4இல் ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து சுதந்திரம் பெற்றது.

1962இல் இராணுவ சர்வாதிகாரமாகியது. பின்னர் 2010 பொதுத் தேர்தலில் இராணுவ ஆட்சி சூழ பங்கேற்று 2011இல் பெயரள விலான சிவிலிய அரசாங்கம் ஏற்படுத் தப்பட்டது. 2015 தேர்தலில் ஆங்சான் சூச்சியின் கட்சி இரு இல்லங்களிலும் வெற்றி பெற்றதை தொடர்ந்து இராணுவ ஆட்சி முடிவுக்கு வந்தது.

மியன்மாரில் இரத்தினங்கள், எண் ணெய் இயற்கை எரிவாயு, கனியுப்புக்கள் என்பன காணப்படுகின்றன.

விகாரைகளின் பூமி என அழைக்கப்படும் மியன்மாரின் தங்கத்தாலான சுவேதகோன் விகாரை புகழ்பெற்றது.

### 3. தேத்தா

- தாவரவியற் பெயர் : ஸ்ரைக்நொஸ் பொட்டாற்ரோறியம் (strychnas potatorium)
- குடும்பம் : லோகானியேசியே (Loganiace-ae)
- ஆங்கில பெயர் : Clearing

இலங்கையின் உலர் வலயத்தில் அதிகமாக வளரும் தேத்தா மரம் ஓரளவு உயர முடையது. இதனது பட்டை ஆழமான பிளவு களை கொண்ட கடினமானது இலைகள் காம்புகள் அற்றவை. சிறிய கனிகளை கொண்ட இதன் விதைகள் 8mm அளவிற்கு சிறியவை. இவை கலங்கிய நீரை தெளி வடையச் செய்வதுடன் நாம் அருந்தும் நீரை நன்னீராக்கித்தரும் சிறப்பையும் கொண் டுள்ளன.

தேத்தா மரத்தினது வேர்கள் அனைத்து வகையான தோல் வியாதிகளையும் குண

மாக்க வல்லது. இதன் விதைகள் மற்றும் வேர் என்பன சுதேச மருத்துவத்தில் பெரும ளவில் பயன்படுத்தப்படுகின்றது. இதன் இரு கனிகள் கண்நோய், சிறுநீரகப் பிரச்சினை, தலையில் ஏற்படும் நோய்கள் என்பவற்றை குணமாக்க வல்லது.

**வேதியல் பெறுமானங்கள்**

(உலர் நிறைக்கானது)

| | வேர் (%) | மரப்பட்டை (%) | சேகரித்த விதை (%) | விற்பனைக்குரிய விதை (%) |
|---|---|---|---|---|
| அல்கொலொயிட்டுகள் | 1.7 | 2.2 | 1.4 | 1.3 |
| பிளேவனொயிட் | 0.14 | 0.374 | 0.21 | 0.021 |
| பீனோல்கள் | 0.209 | 0.167 | 0.039 | 0.059 |
| தனின்கள் | 12.22 | 20.00 | 18.00 | 18.00 |
| சப்போனின்கள் | 1.505 | 0.405 | 5.135 | 4.741 |

இத்தகைய சிறப்பியல்புகளைக் கொண்ட தேத்த மரத்தினை நடுகை செய்து பல பயன்களை அனைவரும் பெற வழி ஏற்படுத்த வேண்டும்.

**4. குயில்**

**உயிரியல் - வகைப்பாடு**

- திணை - விலங்கினம்
- தொகுதி - முதுகு நாணி
- வகுப்பு - பறவை
- குடும்பம் - குக்கூஸ் (CUCULIDAE)

குயில்களில் ஆண் குயில்கள் கறுப்பு நிறமுடையவை. பெண் குயில்கள் வெள்ளை நிறமுடையவை ஆனால் இவற்றின் உடல் முழுதும் கறுப்பு திட்டுக்கள் நிறைந்து காணப்படும். குயில்கள் தனியா கவே பறந்து செல்லும். இவை சோம்பேறித் தன்மையும் வெட்கப்படும் இயல்பும் கொண் டவை. காடுகள் வீட்டுத் தோட்டங்கள் தோப் புக்களில் இவற்றை காணலாம். மரங்களில் மறைந்து உறங்கிக் கொள் ம் குயில்கள் பாடலுக்கு பேர் பெற்றவை அதிகாலையில் பெண் குயில்கள் எத்தனை முறை பாடுகின் றதோ பதிலுக்கு அத்தனை முறை ஆண்கு யிலும் பாடும். அதிகாலையில் தான் இந்த பாட்டுக் கச்சேரி. பகலில் ஆண்குயில்கள் மட் டுமே கூவுகின்றன.


குயில்கள் இந்தியா, பங்களாதேஸ், பாகிஸ்தான். இலங்கை மியன்மார் ஆகிய நாடுகளில் வாழ்கின்றன. கூடு கட்டத் தெரி யாத இக்குயில்கள் காகத்தின் கூட் லே முட் டைகளை இடுகின்றன. குயில்கள் இனப் பெருக்கம் செய்யும் காலம் ஏப்பிரல் தொடக்கம் ஆகஸ்ராகவும் காகங்கள் இனப்பெருக்கம் செய்யும் காலம் ஏப்பிரல் தொடக்கம் ன் ஆகவும் இருப்பதனால் இது குயிலுக்கு சாதக மாக அமைகின்றது. குயில்களின் முட்டை சாம்பல் பச்சை நிறமுடையது காகம் குயில் முட்டையை அடைகாக்கின்றது. கு சு பொரித்து அது பெரிதாகும் பொழுது குயில் என்று காகம் தெரிந்து கொள் ம் பொழுது அதை கலைத்து விடும்.

குயில்கள் பால் மற்றும் அத்திப் பழங் களை விரும்பி உண்கின்றன. இது தவிர

பழுங்கள்பூச்சிகள் மயிர்கொட்டிகள், கம்பளிப் புழுக்கள் என்பவற்றையும் உணவாக உட் கொள்ளுகின்றன. இதன் உடலில் கொழுப்பு நிறைந்திருப்பதனால் மக்கள் இதன் இறைச் சியை விரும்பி உண்ணுகின்றர்.

**5. செங்கோட்டை**

லால்கிலா என அழைக்கப்படும் செங் கோட்டை இந்தியாவின் டில்லியில் அமைந் துள்ளது. இக் கோட்டையின் கட்டுமான



பணிகள் ஷாஜகானால் 1638இல் ஆரம் பிக்கப்பட்டு 1648இல் பூர்த்தியாக்கப்பட்டது. இதன் அமைவிற்கு பெரும் பங்காற் றியவர்களாக ஹமீது மற்றும் அகமது என் போர் திகழ்கின்றனர். இக் கோட்டையானது பாரசீக, ஐரோப்பிய, இந்திய கலை நுணுக் கங்களை வெளிக்காட்டி நிற்கின்றது. இதன் சுவர்கள் கம்பி வரிசைகளால் இணைத்துக் கட்டப்பட்டு உள்ளன. வாயிற் கதவுக்கு அருகே மிக பெரிய காட்சி அரங்கு காணப்படுகின்றது. அங்கே அலங்கரிக்கப்பட்ட சிம்மாசனம் உள் ளது. தங்க மற்றும் வெள்ளியிலாலான வேலிகள் சிம்மாசனத்தையும் பொது மக்க ளையும் பிரித்து நிற்கின்றன.

இக் கோட்டையில் உள்ள காட்சி அரங் கானது பளிங்கு கற்களால் ஆனது. பூக்கள் செதுக்கப்பட்ட தூண்கள், வெள்ளியினால் அலங்கரிக்கப்பட்ட மேற் கூரை என்பனவற்றால் இவ் அரங்கு அமைக்கப்பட்டு உள்ளது. இங்குள்ள உயர்ந்த வளைந்த விதானத்தில் ‘இப் பூவுலகில் சொர்க்கம் என்ற ஒன்று இருக்குமானால் அது இது தான், இது தான், இது தான், என பாரசீக மொழியில் பொறிக்கப்பட்டு உள்ளது. மேலும் இங்குள்ள கூடத்தில் மயில் ஆசனம் அமைக்கப்பட்டு உள்ளது. இதன் நான்கு கால்களும் தங்கத் தினால் ஆனவை. ஆசனத்தின் மேல் பொருத் தப்பட்டுள்ள குடை 12 சிறிய தூண்களின் மேல் அமைக்கப்பட்டு உள்ளது. இவற்றில் வைரங்கள் பதிக்கப்பட்டு உள்ளன.


கோட்டையின் உள் யமுனா நதியின் நீர் ஓடும் வண்ணமான ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளன. இதனை பார்க்கு முகமாக நஹர். ஏ.கெஷத் (பேரின்பம் தரும் ஓடை) தளம் உயர்த்தப்பட்டு உள்ளது. மேலும் இங்கு 1659 இல் கட்டப்பட்ட சிறிய வெள்ளை மசூதியும், ஹயாத் பாக்ஷ் பாக் (வாழ்க்கையின் சிறந்த பரிசு தோட்டம்) எனும் தோட்டமும் உள்ளன.

நிறைந்த அழகிய கலை படைப்புக்களை வெளிகாட்டி நிற்கும் இச் செங்கோட்டை ஒரு சொர்க்க புரியாக திகழ்கின்றது. ஷாஜகா னால் கட்டப்பட்ட இக் கோட்டை அவனது காலத்தில் முக்கிய மையமாக திகழ்ந்தது. ஆங்கிலேயரின் ஆட்சி காலத்தின் போது இராணுவ முகாமாக விளங்கிய இக்கோட்டை சுதந்திரத்தின் பின் இந்திய இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்தது. இன்று இது சுற்றுலா தளமாக காட்சி அளிக்கின்றது.

**6. சி.வை. தாமோதரம்பிள்ளை**

தமிழ் பதிப்புத் துறையின் முன்னோடிகளில் ஒருவராகத் திகழும் சி.

வை. தாமோதரம்பிள்ளை யாழ்ப்பாணத்தில் உள்ள சிறுப்பிட்டி எனும் ஊரில் 1832ம் ஆண்டு செப்ரம்பர் மாதம் 12ம் திகதி வைரவ நாதபிள்ளை பெருந்தேவி தம்பதிகளுக்கு



மகனாகப் பிறந்தார். இளவயதிலே தமிழ் இலக்கண இலக்கியங்களையும் ஆங்கிலத் தினையும் கற்றுத் தேர்ந்த இவர் அறிவியல் துறை சார் விடயத்தினையும் பயின்று கொண்டார்.

1852இல் கோப்பாய் போதனா சக்தி வித்தியாசாலையில் ஆசிரியராக பணியாற் றினார் பின்னர் யாழ்ப்பாணம் வெஸ்லியன் ஆங்கில பாடசாலை (யாழ். மத்திய கல்லூரி) அதிபராக இருந்தபீற்றர் பெர்சிவல் பாதி ரியார். சென்னையில் நடாத்தி வந்த தின வர்த்தினி பத்திரிகை ஆசிரியர் பொறுப்பை 1853ம் ஆண்டு ஏற்றுக் கொண்டார். சென்னை இராசதானிக் கல்லூரியில் தமிழ் பண்டித ராகவும் கடமை ஆற்றினார்.

1858இல் சென்னை பல்கலைக்கழகத்தால் நடாத்தப்பட்ட முதலாவது கலைமானி தேர் வில் சித்தியடைந்தார். பின்னர் தமிழக கள்ளிக் கோட்டை அரசினர் கல்லூரியில் தலைமை ஆசிரியராக கடமை ஆற்றினார். 1871இல் பி.எல் தேர்ச்சி பெற்று கும்பகோ ணத்தில் வழக்கறிஞராக பணி ஆற்றினார். 1884இல் புதுக்கோட்டை உயர்நீதிமன்ற நீதி பதியாக நியமிக்கப்பட்டார். இவ்வாறான உயர் பதவிகளை பெற்ற சி.வை. தாமோத ரம்பிள்ளை 1895ஆம் ஆண்டு ராவ்பகதூர் பட்டமளித்து கௌரவிக்கப்பட்டார்.

1853இல் நீதிநெறி விளக்கம் எனும் ஒழுக்க நெறி சார்ந்த தமிழ் நூல் ஒன்றை பதிப் பித்ததன் மூலம் தமிழ் பதிப்புத் துறையின் முன்னோடி என்ற பெருமையினைப் பெற்றார். தமிழின் அருமை பெருமைகளை தமிழர் உணர்ந்து உயரவேண்டும் என்ற நோக்கோடு பண்டைய சங்கத் தமிழ் நூல்கள் அழிந்து போகாத வண்ணம் தமது அரிய தேடல்கள் மூலம் மீட்டெடுத்து அச்சிட்டு வாழ வைத்தார் தமிழ் நூல்கள் தமிழ் மக்களுக்கு கிடைக்க இவர் பாடுபட்டார்.

1901ம் ஆண்டு ஜனவரி மாதம் 01ஆம் திகதி 69வயதில் சென்னையில் உள்ள புரசை வாக்கம் எனும் ஊரில் இறையடி எய்தினார்.

**7. மூலநோய்**

பெரும்பாலான மக்களை தாக்கும் நோய்களுள் ஒன்றாக மூல நோய் விளங்குகின்றது. மனிதனின் கீழ் குடலில் இருந்து மலவாசல் வரையுள்ள குடல் பாதை களில் உஸ்ணத்தின் காரணமாக ஏற்படும் வீக்கம் அசுத்த இரத்தத்தை வெளியேற்றும் குழாய்களில் ஏற்படும் போது மூலநோய் ஏற்ப டுகின்றது. இந் நோய் தாக்கத்தினால் உட் காரும் போது வலி, மலம் இறுகுதல் இரத்தக் கசிவு என்பன ஏற்படும். உள்மூலநோய்

ஏற்படும் போது மேல்பகுதி இரத்தக் குழாய்களும் வெளிமூலநோய் ஏற்படுகின்ற போது கீழ் பகுதி இரத்தக் குழாய்களும் பாதிப் படைகின்றன.

**அறிகுறிகள்**

- மலம் இறுகுவதால் மலம் கழிக்கும் போது அதிக வலி ஏற்படல்
- மலத்துடன் இரத்தம் வெளி வருதல்
- ஆசனவாய் பகுதிகளில் முளைகள் உருவாகி வலித்தல்

வகைகள்:-

நீர்மூலம், செண்டுமூலம், பெருமூலம், சிறுமூலம், வறள்மூலம், குருதி மூலம், கீழ் மூலம், ஆழி மூலம், தமரக மூலம், வழி மூலம், அழல் மூலம், ஐயா மூலம், முக்கு ற்றமூலம், வினை மூலம், மேக மூலம், குழி மூலம், களல் மூலம், அடித் தள்ளல் மூலம், வெளி மூலம், சுருக்கு மூலம்

**நோய் ஏற்படுவதற்கான காரணங்கள்**

- அதிக காரத்தன்மையான உணவுகளை உட்கொள்ளல்
- கிழங்கு வகைகள் மற்றும் மாமிச உணவுகளை உண்ணுதல்
- நீண்ட நேரம் உட்கார்ந்திருத்தல்
- உணவு செரிமானம் அடையாமை
- பட்டினி கிடத்தல்
- நாள்பட்ட மலச்சிக்கல்
- ஆசனவாயில் ஏற்படும் நோய் தொற்றுக்கள்

இன் நோய் அறிகுறி உள்ளவர்கள் உரிய மருத்துவ சிகிச்சைகள் மேற்கொள்ளுதல் சிறப்புடையதாகும். இந் நோய்க்கு கருணைக் கிழங்கு சிறந்த உணவாகும்.

**8. ஜல்லிக்கட்டு**

பண்டைத்தமிழர்கள் தங்கள் வீரத்தை நிரூபிக்க ஜல்லிக்கட்டைப் பயன்படுத்தினர். அக்காலத்தில் காளைகளை அடக்கி பெண் களை மணம் முடிப்பது தமிழர்களின் வழக் கமாக இருந்தது.

சீறிவரும் காளையோடு மோதி அதை வெல்வது தான் இவ்விளையாட்டின் வெற்றி இப் போட்டிக்கென பல முரட்டுக்காளைகளை ஊர்களில் இருந்து அழைத்து வருவர். சிலர் ஜல்லிக்கட்டுக்கு என்றே காளைகளை வளர்ப்பதும் உண்டு.இவ்வாறான காளைகள் மேளதாளத்துடன் விளையாட்டு மைதானத் துக்கு அழைத்து வரப்பட்டு விரட்டி விடப்படும். அத்தோடு காளைக்களை கோபப்படுத்தவென சில வாத்தியங்களும் முழக்கப்படும். இத னால் காளைகள் மூர்க்கம் அடைந்து ஓட ஆரம்பிக்கும். அப்போது அதனை அடக்க பல இளைஞர்கள் போட்டி போடுவர்.

மாட்டு உரிமையானவர்கள் தங்கள் வசதிக்கு தக்கவாறு மாடுகள் கழுத்தில் பண முடிப்பு மற்றும் தங்கச் சங்கிலி போன்ற வற்றைக் கட்டி விடுவர். இதனை அம்மாட்டை அடக்கி வெற்றி பெறுபவர் பரிசாகப் பெற்றுக் கொள்வார். இன்று பல புதுவிதமான பரிசில் களும் வழங்கப்படுகின்றன.

இந்தியாவில் இடம்பெறும் அலங்கார நல்லூர் ஜல்லிக் கட்டு உலகப் புகழ் பெற்றது.

பொதுவாக ஜல்லிக் கட்டு விளையாட்டின் போது காளைகள் முட்டி சிலர்; காயப்படுவதும் சிலர் இறப்பதும் கூட உண்டு இதனாலும் காளைகள் கொடுமைப்படுத்தப்படுகின்றன என்ற காரணத்தினாலும் இவ் விளையாட்டிற்கு எதிர்ப்புகள் கிளம்பி வருகின்றன. இது தொடர்பாக பல வழக்குகளும் நீதி மன்றத்தில் தொடுக்கப்பட்டு உள்ளன. இதனால் இன்று பல கட்டுப் பாடுகளுடன்; இவ் விளையாட்டிற்கு அனுமதி வழங்கப்பட்டு உள்ளது.

**9. நிலா (Moon)**

நிலா பூமியின் துணைக் கோள் ஆகும். விண்ணில் காட்சி தரும் இவ் நிலாவினை சந்திரன், அம்புலி. மதி, திங்கள் என பல பெயரினால் அழைப்பர். இந் நிலாவானது பூமியை ஒரு நீள்வட்டப் பாதையில் சுற்றி வருகின்றது. ஒருமுறை சுற்ற எடுக்கும் காலம் 29.32 நாட்கள் ஆகும். பூமிக்கும் நிலவுக்குமான சராசரித் தூரம் 384403 Km ஆகும். நிலாவின் ஈர்ப்பு சக்தியானது பூமியின் ஈர்ப்பை விட 6மடங்கு குறைவாக உள்ளது.

4.5பில்லியன் ஆண்டுகளுக்கு முன் பூமியின் மீது வேறு ஒரு கிரகம் பயங் கரமாக மோதியது என்றும் அதனால் உருவான சிதறல்கள் பூமியை சுற்றி ஒன்றாக திரண்டு நிலாவாக உருவானது என கூறப்படுகின்றது. நிலாவில் இருந்து எடுத்து வரப்பட்ட பாறைகளில் மேற் கொள்ளப்பட்ட ஆய்வுகள் மற்றும் சூரிய குடும்பம் உருவானமை தொடர்பான கணனி ஆய்வுகள் என்பன இக் கருத்து சாத்தியமானதாக இருக்கலாம் எனக் கருதுகின்றன.

நிலாவில் வெளிச்சமான உயர் நிலங்கள், விண்கற்கள் வீழ்ந்த பள்ளங்கள், எரிமலைகள், சமவெளிகள் என்பன காணப் படுகின்றன. நிலாவின் தரைப் பகுதியானது இருட்டாகவே உள்ளது. பூமிக்கு மிக அண்மையில் இருப்பதனாலும் சூரிய ஒளியின் காரணமாகவும் தான் அது ஒளி மிக்கதாய் தெரிகின்றது. நிலவின் துருவப் பகுதியில் நீர் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இந்தியா, இஸ்ரோவின் சந்திராயன் - 1 நிலவில் நீர் இருப்பதனை உறுதி செய்துள்ளது.

நிலவினை ஆய்வு செய்வதற்காக சோவியத் ஒன்றியம் 1959இல் (லூனா) விண்கலத்தை நிலவில் இறக்கியது 1968இல் (அப்பலோ- 08) அமெரிக்க வானோடிகள் நிலவும் பாதையில் பயணித்தனர். 1969 – 1972 வரை ஆறு திட்டங்கள் ஊடாக விண் ஒடங்கள் நிலவில் தரை இறக்கப்பட்டன. 1972 அப்பலோ – 17 திட்டம் வரை மனிதன் நிலவுக்கு 11 தடவை பயணித்தான் இதில் 6 திட்டங்கள் மூலம் நிலவில் இறங்கினான். 2004ஆம் ஆண்டு முதல் ஜப்பான், சீனா. இந்தியா, மற்றும் ஐரோப்பிய விண்வெளி நிலையங்கள் நிலவிற்கு விண் கலங்களை அனுப்பி ஆய்வுகளை மேற் கொண்டு வருகின்றன.

அப்பலோ 11 என்ற விண்கலம் ஈகிள் ஒடத்துடன் நீல் ஆர்ம்ஸ்ட் ரோங், மக்கல் கோவின்ஸ், புஜி ஆல்டிரின் ஆகியோரை சுமந்தவாறு நிலவை நோக்கிப் பயணித்தது. 1969ஜுலை 20 இது நிலவில் தரை இறங்கியது. ஜுலை 21 UTC நேரம் 2.56க்கு நீல் ஆம்ஸ்ட் ரோங் தனது இடது காலை நிலவின் தரையில் பதித்து நிலவில் கால் பதித்த முதல் மனிதர் என்ற பெருமையை தனதாக்கினார். இவர் நிலவில் மேற் பரப்பில் நின்ற படியே ‘இது மனிதனுக்கு ஒருசிறு அடியாக இருந்தாலும் மனித குலத்துக்கு ஒருபெரிய மைல் கல் ஆகும்” எனக் கூறினார். 19 நிமிடங்களின்

பின் ஆர்டிரின் நிலவில் கால் பதித்தார். பின் அங்கு பல ஆய்வுகளினை மேற் கொண்ட இவர்கள் மண் மாதிரிகளை எடுத்துக் கொண்டு ஜுலை 24 பூமிக்கு திரும்பினர்.

இவர்கள் கொண்டுவந்த மற்றும் விண் ஓடங்கள் மூலம் பெறப்பட 380 Kg வரையான நிலவுப் பாறைகள் மற்றும் மூலப் பொருட்கள் என்பன அறிவியலாளர்களால் ஆய்வு செய்யப்பட்டு நிலவின் தோற்றம், உட்கட்டமைப்பு, நிலவின் வரலாறு தொடர்பான பல விடயங்கள் கண்டறியப்பட்டன.

நிலவு பற்றி நிறையவே விடயங்கள் அறியப்பட்டாலும் இன்னும் அறியப்பட வேண்டிய விடயங்களும் நிறையவே இருக்கின்றன.

## 10. இலங்கையின் நிர்வாக மாவட்டங்கள்,பரப்பளவு,சனத்தொகை விபரம்

| மாகாணம் | மாவட்டங்கள் | பரப்பளவு KM | பிரதேச செயளாளர் பிரிவு | சனத்தொகை | மாவட்ட ரீதியான பாராளுமன்ற உறுப்பினர்கள் | தேர்தல் தொகுதிகள் |
|---|---|---|---|---|---|---|
| கிழக்கு மாகாணம் | மட்டக்களப்பு | 2854 | 14 | 486447 | 05 | 03 |
| | திருகோணமலை * | 2727 | 11 | 340158 | 04 | 03 |
| | அம்பாறை | 4415 | 20 | 589344 | 07 | 04 |
| வட மாகாணம் | யாழ்ப்பாணம் * | 1025 | 15 | 490621 | 07 | 10 |
| | கிளிநொச்சி | 2617 | 04 | 127263 | | 01 |
| | முல்லைத்தீவு | 1967 | 06 | 121667 | 06 | 01 |
| | மன்னார் | 1279 | 05 | 151577 | | 01 |
| | வவுனியா | 1996 | 04 | 149835 | | 01 |
| மேல் மாகாணம் | கொழும்பு * | 699 | 13 | 2234289 | 19 | 15 |
| | கம்பஹா | 1387 | 13 | 2066096 | 18 | 13 |
| | களுத்துறை | 1598 | 14 | 1060800 | 10 | 08 |
| தென் மாகாணம் | காலி * | 1652 | 19 | 990539 | 10 | 10 |
| | மாத்தறை | 1283 | 16 | 761236 | 08 | 07 |
| | அம்பாந்தோட்டை | 2609 | 12 | 525370 | 07 | 04 |
| வடமேல் மாகாணம் | குருணாகல் * | 4816 | 30 | 1452369 | 15 | 14 |
| | புத்தளம் | 3072 | 16 | 705342 | 08 | 05 |
| மத்திய மாகாணம் | கண் * | 1940 | 20 | 1272463 | 12 | 13 |
| | வெ ரலியா | 1741 | 05 | 700083 | 08 | 04 |
| | மாத்தளை | 1993 | 11 | 442427 | 05 | 04 |
| சப்ரக வா மாகாணம் | ர த்தினபுரி * | 3275 | 17 | 1008164 | 11 | 08 |
| | கேகாலை | 1693 | 11 | 779774 | 09 | 09 |
| வட மத்திய மாகாணம் | அ ரா தபுரம் * | 7179 | 22 | 746466 | 09 | 07 |
| | பொலனறுவை | 3293 | 07 | 359197 | 05 | 03 |
| வா மாகாணம் | பதுளை * | 2861 | 15 | 774555 | 08 | 09 |
| | மொனராகல | 5639 | 11 | 396173 | 05 | 03 |

* மாகாணத் தலைநகரம்



# முற்றத்து மல்லிகை

## நடராஜா ஜெயராஜ்

**நேர்கண்டவர் - கணபதி சர்வானந்தா**

அவர்களுடனான பயணத்தில் நான் இணைந்து கொண்ட பின்னர், அவர்களை “மாற்றுத் திறனாளிகள் என்று குறிப்பிடுவதை நிறுத்திக் கொள்” என்கிறது மனம். ஏனெனில், சாதாரண மனிதர்கள் தமது வாழ்க்கைப் பயணத்தில் அவதானிக்கத் தவறுகின்ற பல நல்ல விடயங்களைக் காண்பதெப்படி என்று அறிந்திருப்பவர்கள். இலக்கு ஒன்றை வைத்து அதனை அடைய இடையறாத முயற்சியுடன் செயற்பட்டுக் கொண்டு இருப்பவர்கள். தமது செயற்பாடுகளில் மிகவும் நுணுக்கத்தைப் பேணுபவர்கள். சமூக ஒழுக்கம் பற்றி இவர்கள் அதிகம் உரையாடுகின்றனர். அவர்கள் சந்திப்பில், அவர்களிடம் நான் கற்றுக் கொண்டவை ஏராளம். அந்த வரிசையில் இந்த நேர்காணலினூடாக மாற்றுத் திறனாளிகள் பற்றிய சில புதிய அனுபவத்தையும் பெற்றுக்கொண்டேன்.

“வலு” சஞ்சிகையின் “முற்றத்து மல்லிகை” என்ற பகுதிக்காக நடராஜா ஜெயராஜுடனான சந்திப்பு கே.கே.எஸ் வீதியில், தாவடிச் சந்திக்கு அருகாமையிலுள்ள, அவரது வேலைத்தளத்திலே நடைபெற்றது. ஒரு மனிதன் சிறு வயதிலேயிருந்து ஒரு தொழிலைக் கற்றுக் கொள்வதன் நன்மையையும், அவசியத்தையும் அவர் உரையாடல் எனக்கு விளக்கியிருக்கிறது. இற்றைக்குப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு சமூகத்தில் ஏற்படக் கூடிய இந்த தொழிலின் முக்கியத்தை உணர்ந்து செயற்பட்டவர். அது வழி தனது மக்களையும் தொழிற் கல்வி பெற ஊக்குவிப்பவர். இன்றைய காலகட்டத்தில் மோட்டார் சைக்கிள்கள் பல்கிப் பெருகிக் கிடக்கின்றன. எல்லாத் துறைகளிலும் மோட்டார் சைக்கிளின் முக்கியம் உணரப் பட்டுள்ளது. நடுத்தரக் குடும்பத்தினருள் அதிகமானோர் மோட்டார் சைக்கிளைப் பயன் படுத்துகின்றனர். அத்தகைய பெருக்கத் திற்கேற்ப திருத்த வேலைகளும் அதிகரித்திருக்கின்றன. யாழ் குடாநாட்டைப் பொறுத்த வரை, வாகனங்கள் பழுதுபார்க்கும் வேலைத்தளங்களில் மீளுருவாக்குவதற்காகக் காத்துக் கிடக்கின்ற வண்டிகள் ஏராளம். அந்த வகையில் அவருடனான பின் வரும் உரையாடல் மிகவும் பயனுள்ளதாக இருந்தது.

**வணக்கம்! ஜெயராஜ், நீங்கள் ஒரு மாற்றத்திறனாளியாக இருக்கின்றீர்கள். அத்துடன் ஒரு சிறந்த மோட்டார் சைக்கிள் பழுது பார்க்கும் “மெக்கானிக்” என்றும் கேள்விப்பட்டேன். உங்கள் அனுபவமும், அவை பற்றிய அறிவும் என்றும் பெறுமதியானவை. எனவே அவற்றை நீங்கள் கருவி**

**நிறுவனத்தினால் வெளியிடப்படும் "வலு" என்ற சஞ்சிகையினூடாக ஒரு பொது வெளியில் பகிர்ந்து கொண்டால் பலர் பயனடைவர். எனவே உங்கள் பற்றிய விபரங்களையும் அனுபவத்தையும் சொல்லுங்கள்.**

வணக்கம், ஐயா. என்ரை அப்பா நல்லூர். அம்மா பரந்தன். நான் பிறந்தது நல்லூரிலைதான். அப்பா மாநகர சபையிலை "பிளம்பர்" வேலை. இந்தியன் ஆமி வந்த கையோடை, எனக்கு நாலு அல்லது ஐஞ்சு வயசிருக்கும் எண்டு நினைக்கிறன், இடம்பெயர்ந்து வந்து கோண்டாவில் காளிகோயிலடியிலை குடியேறீட்டம். எங்கடை வீடு கோண்டாவில் செல்வநாயகம் வீதியில் இருக்கிது. எனக்கு ஐஞ்சு வயது வரைக்கும் எந்த வித அங்கக் குறைபாடும் இல்லாமல்தான் இருந்தனான். பிறகு எனக்குப் போலியோ வந்திது. ஒரு சாதாரண மனிதனா இருந்த என்ரை கால் இரண்டும் இப்பிடியாப் போக, காலிலை வலு இல்லாமல் போச்சுது. இருந்தாலும் நான் கோண்டாவில் இராமகிருஷ்ணா மகாவித்தியாலயத்திலை ஏழாம் வகுப்பவரை படிச்சன். பிறகு எனக்கு ஏதாவது தொழில் ஒண்டைப் பழகி "சொந்தக் காலிலை" நிற்க வேணுமெண்ட ஒர்மம் வர, திரு நெல்வேலியிலை கராஜ் வைச்சிருந்த ஆனந்தனிட்டை தொழில் பழகவெண்டு சேர்ந்திட்டன். அந்த வாய்ப்பைப் பாவிச்சு அப்பிடியே தொழிலைப் பழகி இருபத்தொரு வயது வரைக்கும் அவரோடையே நிண்டன்.

**அப்போ எந்த வயதில் சொந்தமாகத் தொழிலை ஆரம்பித்தீர்கள்? அப்படி ஆரம்பித்தபோது உங்கள் குடும்பச் சூழலிலும் மற்றும் நண்பர்கள் சூழலிலும் ஆதரவு எப்படி இருந்தது? ஏனெனில் நீங்கள் ஒரு மாற்றுத்திறனாளியாகஇருப்பதனால்தான் இதைக் கேட்கிறேன்?**

பிறகு சொந்தத் தொழிலா இதை துவங்குவமெண்டு வெளிக்கிடேக்கை முதலாளி அவ்வளவா விருப்பப்படேல்லை. அங்கை பக்கத்துக்கடைக்காரர் என்ரை சிநேகிதன். அவர்தான் என்னை ஊக்கப் படுத்தினவர். அப்பாவும், அம்மாவும் நல்ல சப்போட். வலு ஆதரவா இருந்தவை. சிநேகிதரும் நல்ல உதவி. அதோடை வாடிக்கையா என்ரை கையாலை தங்கடை சைக்கிளைத் திருத்த வேணுமெண்டு வாறவை எல்லாரும் ஊக்கப்படுத்தினவை. தொழில் துவங்கேக்கை எனக்கு இருபத்தொரு வயசு. என்னை வீட்டிலை அப்பனெண்டுதான் செல்லமாக் கூப்பிடுகிறவை. தொழிலுக்கும் அந்தப் பேரை வைச்சு "அப்பன் மோட்டர் வேக்ஸ்" எண்டே வைச்சிட்டன். முதலிலை பொற்பதி றோட்டிலைதான் துவங்கினனான். பிறகு தாவடியிலை வந்திட்டன். இப்ப இந்த பகுதியிலை அப்பன் என்ற பேரைச் சொல்லி ஆரைக் கேட்டாலும் என்ரை கடையைக் காட்டுவினம். இப்ப என்னைத்தேடிக் கன




ஆக்கள் வருகினம்.

**சொந்தத் தொழில் என்று ஆரம்பிக்கும்போது, நீங்கள் எதிர்கொண்ட பிரச்சனைகள் என்ன?**

தொழிலுக்கான “முதல்“ தேடுறது தான் முதல் பிரச்சனையாக இருந்தது. மாற்றுத் திறனாளியா இருக்கி றதாலை பொதுவா உதவி செய்யத் தயங்கிற நிலைதான் எங்கடை ஆக்களிட்டை இருக்கு. அந்த வகையிலை எங்கடை முன் னேற்றத்திலை அக்கறையுள்ள அப்பா, அம்மா செய்த உதவி எனக் குக் கொஞ்சம் ஆறுதலா இருந்தது. பிறகு தொழிலிலையும் சில போட்டி வந்திது. அதையும் என்ரை கெட்டித் தனத்தாலை சமாளிச்சுப் போட்டன். வழமையா ஒரு மனுசன் ஒரு தொழிலைத் துவங்கேக்கை என்ன எல்லாம் குறுக்கை வருமோ. அதுவும் நேராவும் மறைமுகமாயும் வந்திது. அதையும் எட்டிக் கடக்க வேண்டி இருந்திது.

**நீங்கள் திருமணமானவரா ஜெயராஜ்? அப்படியாயின் குடும்ப வாழ்க்கை எப்படி இருக்கிறது? மாற்றுத் திறனாளியென்ற வகையில் உங்கள் குடும்ப அனுபவம் எப்படி அமைந்திருக்கிறது?**

நான் இருபது வயசிலை கலியாணம் கட்டிட்டன். நாலு பிள்ளையள் இருக்கு. என்ரை மனிசியின்ரை பேர் ரஞ்சனா. அவ வின்ரை சொந்த இடம் பளை. இப்ப அவ யாழ்ப்பாண ஆஸ்பத்திரியிலை வேலை. (அங்கு நின்ற சிறவனைக் காட்டி) இவர் தான் என்ரை மூத்தவர். பேர் தனுஷ். லீவு நாளிலை என்னோடை நிப்பார். அவருக்கு இந்தத் தொழிலைப் பழக வேணுமெண்டு ஆசை. இப்ப அரைத்திட்டம் தானாச்



செய்யிறதுக்குப் பழகீட்டார். மோட்ட சைக்கிளும் வடிவா ஓடுவர். ஒரு சாதாரண ஆள் எப்பிடி குடும்பத்தைப் பாத்துப் பராம ரிக்கிறரோ அதை விட நான் குடும்பத்தை எந்தக் குறையுமில்லாமல் பாக்கிறன் எண்டு தான் சொல்லுவன்.

**நீங்கள் உங்கள் அனுபவத்தை வைத்து மாற்றுத் திறனாளிகளுக்கு விசேடமாக என்னத்தைச் சொல்ல விரும்புகிறீர்கள்? அவர்களுக்கு எந்த வகையில் உதவிசெய்ய விரும்புகிறீர்கள்?**

மாற்றுத் திறனாளிகளை எங்கடை சமூகம் மதிக்கிறது குறைவு. ஆனால் நாங்கள் மனம் கிறங்கக் “ டாது. என்னைப் பொறுத்தவரை மாற்றுத் திறனாளிகளிட் டைத்தான் அதிக பொறுமையும், நிதானமும் இருக்கு. வேகத்திலும் விட விவேகம் இருக்கு. எதுக்கும் அவசரப்படமாட்டினம். வடிவா யோசிச்சுத்தான் எதையும் செய்வினம்.

யோசிச்சுத்தான் எதையும் செய்வினம். அதாலை அவை தங்கடை தங்கடை வலு இழப்புக்கு ஏற்றமாதிரி, அங்கக் குறைக்கேற்ற மாதிரி ஏதாவது தொழிலைப் பழகலாம். பழகவும் வேணும். அதுக்கு பல வழிகள் இருக்கு. இப்ப உங்கடை கருவி மாதிரி நிறுவ னங்களிட்டை உதவி கேக்கலாம். மற்றவை யளிட்டை கை ஏந்தாமை , என்னைப் போல ஒராளுக்கோ, இரண்டு பேருக்கோ தொழில் குடுக்கக் கூடியதாக எல்லாரும் மரியாதையா சீவிக்கக் கூடிய வழியள் கனக்க இருக்கு. மாற்றுத் திறனாளியள் என்னட்டை வந்தா லும் நான் என்ரை செலவிலை இந்தத் தொழி லைப் பழக்கிவிடுவன். உங்கடை அங்கத் தவரிட்டையும் சொல்லிவிடுங்கோ.


இனிப் போதும் என்பது போலச் சிரித்தார். நிலைமையைப் புரிந்து கொண்டோம். என்னுடன் பேசியவாறு, இரு இளைஞர்கள் கொண்டுவந்த சிவப்பு நிற "ஸ்கூட்டி" ஒன்றினைத் திருத்திக் கொண்டி ருந்தவரை தொடர்ந்தும் சிரமப்படுத்த விரும்பாமல் விடைபெற்றோம்.

" அப்போ விடைபெறுகிறோம் ஜெயராஜ். நன்றி".

# வலுவிடம் கேளுங்கள்


**நான் அலுவலகம் ஒன்றிற்குச் சென்றிருந்த பொழுது வாய்பேச முடியாத ஒருவர் அங்கு பணியாற்றுகின்ற பணியாளர்களுடன் தொடர்பு கொள்ளும் பொழுது இடர்படுவதை நான் கண்டேன். வாய் பேச முடியாதவர்கள் தமக்கான சேவைகளைப் பெற்றுக் கொள்வதை எவ்வாறு இலகுவாக மேற்கொள்ள முடியும் என்பது பற்றிக் குறிப்பிட முடியுமா?**

**- தாரணி வவுனியா**



நிச்சயமாக இது ஒரு கவனம் கொள்ளத்தக்க விடையமாகும். செவிப்புலனற்றவர்கள் சமூக மட்டத்தில் பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர். அவற்றில் ஒன்றுதான் தாங்கள் குறிப்பிட்டுள்ள தொடர்பாடல் சார்ந்த பிச்சினை.

குறைந்த பட்சம் மக்களுடன் நேரடியாக தொடர்புபடுகின்ற அலுவலகங்களில் கட்டாயம் சைகை மொழி தெரிந்த ஒருவராவது இருத்தல் வேண்டும் அல்லது அத்தகைய அலுவலகங்களில் பணியாற்றுகின்றவர்களுக்கு சைகை மொழி சார்ந்து பயிற்சி வழங்கப் படுதல் வேண்டும். எது எவ்வாறு இருப்பினும் அலுவலகங்களில் பணி புரிகின்றவர்களோ அல்லது ஏனையவர்களோ தன்னார்வமாக சைகை மொழியை கற்கின்ற பொழுது இவ் வாறான பிரச்சினைகள் மேலெழாது இருப்பதற்கு வாய்ப்புக் கிட்டும்.



# வலு தரும் புத்தாண்டுப் பலன்கள்

ஆக்கம் :- ஜோதிட வித்துவான் வித்தியரத்னா

V.A சிவராசா (BA)

## ஏவிளம்பி வருஷப்பிறப்பு

### திருக்கணித பஞ்சாங்கப்படி

துர்முகி வருஷம் பங்குனி மாதம் 31ம் திகதி (14.04.2017) வியாழக்கிழமை பின்னிரவு 2மணி 04 நிமிடத்தில் ஏவிளம்பி என்னும் பெயருடைய புத்தாண்டு உதயமாகின்றது. அன்று நட்சத்திரம் விசாகம் 3ம் பாதம் அபர பட்ச திருதியை திதி இது 60 வருட சுற்று வட்டத்தில் 31வது வருஷமாகும். பங்குனி 31ந்திகதி இரவு 10.04.மணி தொடக்கம் மறு நாள் காலை 06.04மணி வரை மேட சங்கிரமண புண்ணிய காலமாகும். புது வருடம் பிறக்கும் போது உதய லக்கினம் மகரம் ஆக அமைகிறது.

### வாக்கிய பஞ்சாங்கப்படி

துர்முகி வருடம் பங்குனி மாதம் 31ம் திகதி (14.4.2017) வியாழக்கிழமை பின்னிரவு 12மணி 48 நிமிடமளவில் திருதியைத்திதி விசாக நட்சத்திரம் 3ம் பாதத்தில் சித்தி நாமயோகம் வணிச கரணம் மகர லக்கினம் மகர நவாம்சத்தில் புதன் காலவோரை சனி ஒரையில் சாத்வீக குண வேளையில் ஏவிளம்பி வருஷம் பிறக்கின்றது.

### புண்ணிய காலம்

13.04.2017 இரவு 8.48 தொடக்கம் 14.04.2017 அதிகாலை 4.48வரை

### ஏவிளம்பி வருட கைவிசேஷ நாட்கள்

#### திருக்கணித பஞ்சாங்கம்

- 14.04.2017 வெள்ளிக்கிழமை
  இரவு 8.10 – 9.45வரை
- 16.04.2017 ஞாயிற்றுக்கிழமை
  இரவு 8.08 – 9.30 வரை
- 17.04.2017 திங்கட்கிழமை
  பகல் 9.45 - 11.00வரை

#### வாக்கிய பஞ்சாங்கம்

- 14.04.2017 வெள்ளிக்கிழமை
  இரவு 12.09 – 12.31வரை
- 15.04.2017 சனிக்கிழமை
  இரவு 10.38 – 11.38 வரை
- 17.04.2017 திங்கட்கிழமை
  பகல் 9.52 – 11.51வரை

### ஏ விளம்பி வருஷ வரவு செலவு

| இராசிகள் | வரவு | செலவு |
|---|---|---|
| மேடம் | 5 | 5 |
| இடபம் | 14 | 11 |
| மிதுனம் | 2 | 11 |
| கற்கடகம் | 2 | 2 |
| சிங்கம் | 14 | 2 |
| கன்னி | 2 | 11 |
| துலாம் | 14 | 11 |
| விருச்சிகம் | 5 | 5 |
| தனுசு | 8 | 11 |
| மகரம் | 11 | 5 |
| கும்பம் | 11 | 5 |
| மீனம் | 8 | 11 |

# எழுதுங்கள் வெல்லுங்கள்



## போட்டி இல. 13 வினாக்கள்

1. இலங்கைப் பாராளுமன்றம் அரசியல் அமைப்பின் 13வது திருத்தமாக மாகாணசபை சட்டத்தினை எப்போது சேர்த்துக் கொண்டது?
2. மியன்மாரின் பழைய பெயர் என்ன?
3. மூங்கிலின் சராசரி ஆயுட்காலம் யாது?
4. தற்பொழுது சூரியன் எவ்விண் மீனை நோக்கி பயணிக்கின்றது?
5. லால்கிலா (செங்கோட்டை) எங்குள்ளது?
6. இங்கிலாந்தில் கடற்படை தளபதியாக இருந்து ஒரு கண், மற்றும் ஒரு கையை இழந்த வீரர் யார்?
7. வெறுங்கை என்பது மூடத்தனம் விரல்கள் பத்தும் மூலதனம் என்ற கூற்றை மாற்றி கையின்றி கால்களால் விமானம் செலுத்தி சாதனை படைத்த மாற்றுத்திறனாளி பெண்மணி யார்?
8. உலக ஒட்டிச தினம் எப்போது அனுட்டிக்கப்படுகிறது?
9. 2016 பரா ஒலிம்பிக் போட்டியில் இலங்கை எத்தனையாவது இடத்தைப் பெற்றது?
10. 2016கணிப்பீட்டிற்கு அமைய இலங்கையில் மாற்று வலுவுடையோரின் விகிதம் யாது?

**இவ் வினாக்களுக்குரிய சரியான விடைகளை கீழ் உள்ள புள்ளிக்கோட்டில் எழுதி அனுப்புங்கள். இப் படிவத்தில் எழுதி அனுப்பி வைக்கப்படும் விடைகள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்.**

**விடைகளை 30.04.2017 க்கு முன்னர் எமக்கு கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவையுங்கள். சரியான விடைகளை எழுதி அனுப்பும் வெற்றியாளர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படும்.**

## போட்டி இல. 12வெற்றியாளர்கள்

01. மு.அனிஸ்ரலா
மாதகல்

02. சண்முகரட்ணம் சதீஸ்குமார்
சித்தங்கேணி

03. மேரின் பிறேமலா துரைரட்ணம்
சங்கானை

விடைகள்

போட்டி இல. 13

# எழுதுங்கள் வெல்லுங்கள்

01.................................................................................................................

02.................................................................................................................

03.................................................................................................................

04.................................................................................................................

05.................................................................................................................

06.................................................................................................................

07.................................................................................................................

08.................................................................................................................

09.................................................................................................................

10.................................................................................................................

1. முழுப் பெயர்: ..............................................................................

2. தபால் முகவரி: ..............................................................................

3.தொலைபேசி இலக்கம் ........................................................................

4. பிறந்த ஆண்டு, மாதம், திகதி ..............................................................

**போட்டி இல - 12 விடைகள்**

1. D.S.சேனநாயக்க
2. பிரிவு 1949 இணைவு 1990
3. tamavintus intica
4. போபோசு, டெய்போசு
5. இராஜராஜன்
6. லூடவிக் வான் பீதோவன்
7. 2013-05-21
8. 1985
9. நரம்பியல் ஒழுங்கின்மை காரணமாக மூளையில் ஏற்படுகின்ற பாதிப்பினால் ஒருவருடைய எழுதுதல் வாசித்தல், சிந்தித்தல், கணித செயற்பாடுகள், பேசுதல் என்பவற்றில் இடர்படுகின்ற நிலமை தெளிவாக தெரியுமேயானால் அது கற்றல் இயலாமை ஆகும்
10. E

அனுப்ப வேண்டிய முகவரி :

எழுதுங்கள் வெல்லுங்கள்
கருவி
மாற்றுத்திறனாளிகளின் சமூக வள நிலையம்
இல.1166/15 அருளம்பலம் வீதி,
நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.

# "கருவி" சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினம் 2016





















ISSN 2513-2989
9 772513 298007

தேவி Printers, Jaffna. 021 300 3030